தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 66 **மலர் 12**

தமிழ்ப் பொழில்

காந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2024

துணர் : 66 ஆங்கீரச - பங்குனி மலர் 12

மார்ச் — ஏப்ரல் 1993

உள்ளுறை

பக்கம்

1. திருவாசகம் கூறும் 'கோகழி' யாது ? 530
முனைவர் பெ. சுப்பிரமணியன்

2. அண்ணாமலை ரெட்டியாரின்
சீட்டுக்கவி இலக்கியம் 538
முனைவர் தா. ஈசுவரபிள்ளை

3. கதைகளும் - முடிவுகளும் 548
டாக்டர் இரா. சண்முகவேலன்
எம். ஏ., எம்.ஃபில்., பி.டி., பி.எச்.டி.

4. பண்டைத் தமிழரின் விருந்தோம்பல் பண்பாடு 554
அத்திவெட்டி வே.சிதம்பரம்

5. என் நினைவில் க. நா. சுப்ரமணியம்
என்னும் பத்திரிகையாளர் 559
பா. மதிவாணன்

6. புலவர் ஏறு அ. வரதநஞ்சையபிள்ளை
ஓர் அறிமுகம் 567
வித்துவான் பெ. கு. வரதராசன்

பதிப்பாசிரியர் : பேராசிரியர் ச. பாலசுந்தரம்

தமிழ்ப்பொழில் ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்

திரு. த. கோ. ப. கோவிந்தசாமி, பி. காம்.,
செயலாளர், கரந்தைச் தமிழ்ச் சங்கம்

திரு. கலைமாச்செல்வர் எஸ். டி. காசிராஜன், ஐ. ஏ. எஸ்.,
முன்னாள் செயலாளர், தமிழ்வளர்ச்சி பண்பாட்டுத்துறை
சென்னை.

திரு சிலம்பொலி சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி., பி எல். பிஎச்.டி.
முன்னாள் இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

திரு முனைவர் சி. பாலசுப்பிரமணியன், எம் ஏ எம்.லிட் பிஎச்.டி.
முன்னாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சை.

திரு முனைவர் தமிழண்ணல், எம். ஏ , பி எச்.டி.,
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.
'ஏரகம்' 4/384, சதாசிவநகர், வண்டியூர்வழி,
மதுரை-625 020.

திரு. முனைவர் மு. கோவிந்தராசன்,
பேராசிரியர், தமிழ்நாடு கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை.

திரு முனைவர் சோ. ந. கந்தசாமி, எம். ஏ., எம். லிட்., பி எச்.டி.
இலக்கியத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக் கழகம்

திரு முனைவர் மா. இராமலிங்கம், எம். ஏ., பிஎச். டி.,
தமிழ்த்துறைத் தலைவர், பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

திரு. தமிழ்த்தொண்டர் கோ. முத்துப்பிள்ளை, பி. ஏ.,
முன்னாள் அரசு இணைச் செயலாளர், சென்னை.

திரு. முனைவர் ஈரோடு தமிழன்பன், எம். ஏ., பிஎச்.டி.,
தமிழ் முதுகலைத்துறை, புதுக்கல்லூரி, சென்னை.

திரு. பேராசிரியர் பி. விருத்தாசலம், எம். ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக்கல்லூரி.

திரு. புலவர் செ. இராசு, எம். ஏ.,
இணைப்பேராசிரியர், கல்வெட்டுத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

திரு. புலவர் ஆ. பாலன், எம். ஏ., எம். ஃபில்., பிஎச்.டி.
துணை முதல்வர், த.உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

திரு. புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ., எம். எட்.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவரமேனிலைப்பள்ளி

திரு. முனைவர் பா. மதிவாணன், எம். ஏ., எம். ஃபில்., பிஎச் டி.
தமிழ் விரிவுரையாளர், த. உ. கரந்தைக் கலைக்கல்லூரி.

30/8/93

திருவாசகம் கூறும் 'கோகழி' யாது ?

முனைவர் **பெ. சுப்பிரமணியன்,**
அ. வீ வா. நி திரு புட்பம் கல்லூரி
பூண்டி.

முன்னுரை :

திருவாசகம் இறைவனருளால் தமிழர்க்குக் கிடைத்த தெய்வத் தமிழ் மறை. சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் எட்டாந் திருமுறையாகப் போற்றப்பெறும் இது அனுபவ ஞானத்தை விளக்கும் நூல். ஆன்மாவைக் கனியச் செய்து, பக்தி வழியில் படிப்படியாக உயர்ந்து ஞானம் பெறச் செய்து இறைவன் திருவடியடைய வழிகாட்டும் நூல்.

> "திருவாசகமாவது, சொற்பதங் கடந்ததும் நிலையுள்ளதுமான பேரானந்தத்தை மாணிக்கவாசகர் பெற உதவிய வாழ்க்கை முறைகளையும் ஆன்மீக அனுபவங்களையும் எடுத்துரைக்கும் சுய சரிதையாகும். ஆனந்த பரவசமாக்கும் பாடல்களாலும் இசைகளாலும் சமய உயர்ச்சிகளையும் உள்ளக் கிளர்ச்சிகளையும் வெள்ளப் பிரவாகமாகப் பொழியும் நூலாகும் திருவாசகம். அந் நூலை மெய்ஞ்ஞானயியலைச் சார்ந்த இறையியலை விளக்கும் மிகப் பொருத்தமான வழிகாட்டிக் கையேடு என்று கருதலாம்"

என்று வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர் 'தமிழ் இலக்கியமும் அதன் வரலாறும் ஓர் ஆராய்ச்சி' என்ற நூலில் குறிப்பிடுவதாகக் கோ. வன்மீகநாதன் குறிப்பிடுகின்றார்.[1] திருவாசகத்தை வேதத்துடன் ஒப்பிட்டு, அதனைவிடச் சிறந்தது என்று சிவப்பிரகாசர் குறிப்பிட்டுள்ளார்,[2] அனுபூதி என்னும் மெய்ஞ்ஞான இயலை (Mysticism) விளக்கும் இந்நூலுக்கு உரையெழுதிய சான்றோர் கருத்துக்களில் பொருள் வேறுபாடு காணமுடிகிறது. அத்தகைய சொற்களில் 'கோகழி' என்னும் சொல் குறித்து அறிஞர்கள் கூறும் கருத்துக்களை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருவாசகத்தில் 'கோகழி' சொல்லாட்சி :

திருவாசகத்தில் மாணிக்கவாசகர் ஐந்து இடங்களில் இச் சொல்லை ஆண்டிருக்கிறார். அவை,

1. கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க.

1) சிவபுராணம் அடி-3

2. கோகழி மேவிய கோவே போற்றி.

4) போற்றித் திருவகவல் - அடி 157

3. இன்பந் தருவன் குயிலே ஏழுலகும் முழு தாளி
அன்பன் அமுதளித் தூறும் ஆனந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச்சுவ டொத்த நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றும் குயிலே கோகழி நாதனைக் கூவாய் !

18. குயில்பத்து 6 (351)

4. பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனும்
கண்டாரும் இல்லைக் கடையேனைத் - தொண்டாகக்
கொண்டருளுங் கோகழிஎங் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மா றுரை.

48. பண்டாயநான்மறை - 1(626)

5 நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி எழுகோ கழிக்கரசைப் – பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண்.

48. பண்டாய நான்மறை-5 (630)

மேற்கண்ட ஐந்து இடங்களிலும் 'கோகழியாண்ட குருமணி', 'கோகழி மேவிய கோ', 'கோகழிநாதன்','கோகழி எங்கோமான்', கோகழிக்கரசு என இச்சொல் இடம்பெற்றுள்ளது.

கோகழி பற்றிய நான்கு கருத்துக்கள் :

கோகழி என்பதை ஊர்ப்பெயராகக் கருதும் அறிஞர்கள் நான்கு வகையாகக் கூறுகின்றனர். அந்நான்கு கருத்துக்கள் வருமாறு.

1. கன்னட நாட்டில் உள்ள கோகழி என்னும் ஊர்.
2. கழுமலம் – சீகாழி
3. திருவாவடுதுறை
4 திருப்பெருந்துறை

1. கன்னட நாட்டுக் கோகழி :

திருவாசகம் 630-ஆம் பாட்டில், கோகழி, பெருந்துறை என்னும் இரண்டு இடங்கள் குறிப்பிடப்பட்டிருப்பதால் இரண்டும் வெவ்வேறு தலங்கள் என்று முடிவு செய்து, இவ்வூர்

கன்னட நாட்டில் பெல்லாரி மாவட்டம், அடகள்ளி வட்டத்தி லுள்ள ஓர் ஊரே என்று ஆராய்ந்து ம. பாலசுப்பிரமணிய முதலியார் என்பவர் குறிப்பிட்டிருக்கிறார். அதற்கு அவர், முற்காலத்தில் கன்னடநாடு தமிழ் வழங்கும் பகுதியாகவும், வீரசைவம் விளங்கும் பகுதியாகவும் திகழ்ந்த காரணத்தையும் காட்டினார் மேலும் கன்னட மொழிக் கல்வெட்டுக்கள் சில கி.பி. 1158ல் வீரபாண்டிய தேவன் கோகழி நாட்டை ஆண்டான் என்று கூறும் சான்றையும் அவர் கொண்டார். இவர் கருத்தை அறிஞர் திருச்சிற்றம்பலம் மு. அருணாசலம் எளிமையாக மறுக் கிறார். தென்பாண்டிநாட்டு வாதவூரில் தோன்றி, மதுரையில் அமைச்சுத்தொழில் நடத்தித் திருப்பெருந்துறையில் சிவபெரு மானால் ஆட்கொள்ளப்பெற்றுச் சோழநாட்டில் தில்லைப் பெருமான் திருவடியில் இரண்டறக் கலந்த மாணிக்கவாசகர் கன்னட நாட்டில், அவர் காலத்திற்கு முன்பும் பின்பும், இன்றும் கூடத் தமிழ்நாட்டில் சமயத்தொடர்போ, இலக்கியத்தொடர்போ பெறாத இச்சிற்றூரை வணங்கிப் பல பாடல்களில் குறிப்பிட்டார் என்பதைச் சைவர் யாரும் ஒப்பக்கொள்ளமாட்டார் என்று கூறி மாணிக்கவாசகரால் பெருமையுடன் கூறப்பட்ட கோகழி என்ற பெயரில் ஓர் ஊரைப் பிற்காலத்தில் 12-ஆம் நூற்றாண்டில் ஏற்படுத்தியிருக்கலாம் என்னும் அறிஞர் மு. அருணாசலம் கருதுகின்றார். மாணிக்கவாசகர் வரலாற்றுடன் ஒப்ப நோக்கும் போது இக்கருத்து ஆய்வுக்கு ஏற்புடையதாகத் தோன்றுதலின் மாணிக்கவாசகர் குறிப்பிட்ட கோகழி கன்னட நாட்டினைச் சார்ந்ததன்று என முடிவு செய்யலாம்,[3] என்பது அவர் கருத்து.

2. சீகாழி என்னும் கருத்து :

பாடல் 630ல் குறிப்பிட்டிருக்கும் இரண்டு இடங்களும் வெவ்வேறு ஊர்கள் என்று பிறர் கருதியது போலவே வே. மு. சீனிவாசமுதலியார் என்பவரும் கருதி, கோகழி என்பது சிவபுரம், கழுமலம் என்னும் காழியையே குறிக்கும் என்றார். மேலும் அவர் கொழுமை + கோடி என்ற இவ்விரு சொற்களும் கூடிய மருஉவின் பாத்தியாய்த் திரிந்து ஒரு சொல் நேர்மைத் தாய்க் கொருடி என நின்றாற்போல, கொழுமை + காழி என்ற இவ்விரு சொற்களும்கூடி கோகழி என நின்று வளமுடைய காழிநகர் எனப் பொருள் தந்து நின்றன என்று விளக்கம் தந்தார். திருஞானசம்பந்தர் கழுமலத்தின் பன்னிரு பெயர்களுக்கும் தனிப் பதிகமே பாடியவர் காழியென்று எங்கும் சொன்னாரேயன்றி, ஓரிடத்தும் கோகழி எனச் சொன்னதில்லை என்றும், கழுமல மதனில் காட்சி கொடுத்தார் என்றால், அடிகள் குறிப்பிடும்

பிற ஊர்களிலும் காட்சி கொடுத்தார் என்று ஆராய்வது முடிவில்லாதது ஆதலின், அடிகள் குருவருள் பெற்ற கோகழி சீகாழி என்பது பொருந்தாது என்று அறிஞர் மு. அருணாசலம் கூறி மேற்கருத்தை மறுப்பதும் பொருத்தமாகத் தோன்றுவதால் கோகழி சீகாழியன்று எனக் கருதலாம்.[4]

3. திருவாவடுதுறை என்னும் கருத்து :

முதன்முதலாக உரை வெளியிட்ட வாசுதேவ முதலியார் திருவாவடுதுறை என்று குறிப்பிட்டார். பின் வந்தோராகிய முருகேச முதலியார், மாசிலாமணி முதலியார் ஆகியோர் அப்படியே எழுதிவிட்டனர். திருவாசகம் 630 ஆம் பாடலில் பெருந்துறை, கோகழி என்ற இரு பெயர்கள் வருவதால், கா. சுப்பிரமணிய பிள்ளை, இராமநாதபிள்ளை, டாக்டர் போப் போன்ற பலரும் இவ்விடத்தில் இடர்ப்பட்டுத் திருவாவடுதுறை என்று குறித்தனர் நவநீதகிருட்டிண பாரதியார், திருவாவடுதுறை எனக்குறிப்பிட்டு, 'கோகழிக் கரசை' எனக் கூறியிருப்பது, திருவாவடுதுறையின் தலவிருட்சம் அரசாதலின், இது ஆங்குள்ள சிவபோதியாகிய அரசமரத்தையே குறிக்கும் என்றார். ஆனால் பெருமான் அடிகளைக் குருந்த மரநிழலில் ஆட்கொண்டார் என்னும் வரலாற்றடிப்படைக்கு இது முரணாதலின் இக்கருத்து ஏற்புடையதன்று என்பது அறிஞர் மு. அருணாசலம் கருத்து. மகாவித்துவான் தண்டபாணி தேசிகர் தருமபுரம் பதிப்பில் கோகழி என்பதற்குத் திருப்பெருந்துறை எனக் குறிப்பிட்டு, திருவாவடுதுறை எனக் குறித்தால் ஆதீனத்திற்குப் பெருமை சேர்க்கும் எனக்கருதி, விருப்பின் காரணமாகத் திருவாவடு துறை என்று பொருள் கூறினார். மேலும் மாணிக்கவாசகர் திருவாசகத்துள் திருவாவடுதுறையை எங்கும் குறிப்பிடவில்லை; அருகிலிருக்கும் திருவிடைமருதூரைக் குறித்துள்ளார். ஆகவே, அவர் திருவாவடுதுறையை அதன் இயல்பான பெயரால் குறிப்பிடாமல் வேறு பெயரால் குறிப்பிட்டார் என்று கருதுவது அறிவுக்குப் பொருத்தமாயில்லையென்று கூறி, கோகழி என்பதற்குப் பொருள் திருவாவடுதுறை என்பார்தம் கருத்தையும் அறிஞர் மு. அருணாசலம் மறுக்கிறார்.[5]

4. திருப்பெருந்துறை என்னும் கருத்து :

கோ - பெரிய ; கழி - துறை எனக்கூறும் விளக்கத்தால் கோகழி என்பதற்குப் பெருந்துறை என்றே அறிஞர் பலரும் உரையெழுதினர் கா சுப்பிரமணியபிள்ளை, ம.வே நெல்லையப்ப பிள்ளை போன்றோர் இவ்வாறு கூறினர். திருவாசகத்தின்

முதல் பகுதி சிவபுராணம். இது திருப்பெருந்துறையில் அருளியது என்பது அதன் வரலாறு. சிவபுராணத்தின் முதல் மூன்று அடிகள்

> ''நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
> இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
> கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க''

என வருவன. இத்தொடக்க அடிகள் பொருள் பொதிந்தவை 'நமச்சிவாய' என்ற ஐந்தெழுத்தை இறைவன் திருநாமமாகவும், அவனது மந்திர வடிவாகவும் கொண்டு பெருமானை முதலடியில் வாழ்த்திப் பின்னர், அவன் திருவடியை வாழ்த்தி, அவன் இமைப் பொழுதும் தமது நெஞ்சத்துள் நீங்காது நின்ற நிலைமையையும் வாழ்த்துகிறார். இப்படிப்பட்ட இறைவன் குருநாதனாக எழுந் தருளி வந்து கோகழியில் தம்மை ஆட்கொண்டருளினான் என்று மூன்றாவதாக அந்தக் குருமூர்த்தத்தை வாழ்த்துகிறார். திருவாச கத்தில் முதன் முதலாக வரும் இடப்பெயர் கோகழி. பெருமான் பெருந்துறையில் தம்மை ஆட்கொண்டவன் என்ற நினைவுடன் மாணிக்கவாசகர் பாடினார் என்பது கருத்து. எல்லா வரலாறு களும் மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் பெருந்துறையில் அருள் செய்தான் என்றே கூறுகின்றனவாதலின் இதுவே பொருத்தமானது; ஒரே பாடலில் பெருந்துறை, கோகழி என்னும் சொற்கள் வருதலால் மயங்க வேண்டியதில்லை. பெருந்துறை என்பது தலப்பெயர்; (ஊர்ப்பெயர்) கோகழி என்பது கோயிலுக்கு உரிய பெயர் என்று பல்வேறு தலங்களுக்கும், அங்குள்ள கோயில் களுக்கும் தனித்தனிப் பெயர்கள் இருப்பதை வெண்ணெய்நல்லூர் அருட்டுறை; நறையூர் - சித்தீச்சுரம் ஆகியவற்றால் எடுத்துக் காட்டி, மறைமலையடிகள் போன்றோர்தம் கருத்துக்களையும் தமக்கு ஆதரவாகக் கொண்டு மு. அருணாசலம் கூறினார்[6]

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய திருப்பெருந்துறைப் புராணத்தில் பெருந்துறைப் படலத்தின் 79-ஆம் பாடல் குருந்தின் கீழ் அமர்ந்த மறையவராக வந்து இருபனையளவு ஆழம் அகழ்ந்தாலும் நீர் ஊறாத இந்த நிலத்தில் ஒரு வெட்டு வெட்டியவுடன் குமிழியெடுத்து நீர் பெருகியமையால் இவ்விடம் பெருந்துறையாயிற்று என்ற காரணத்தைக் கூறுகிறது. நீரில்லாத அப்பகுதியில் பொய்கை இருந்தால் சிறப்பித்துப் பேசுதல் தக்கதே. மறைமலையடிகளும் பெருந்துறை என்பதற்குத் திருவாசகம் அருட்பத்தில் வரும்,

"திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்துறை" எனவரும் பாடலைக் காட்டிப் பொய்கை என்ற பொருளைக் கூறினார். எனவே, பொய்கையால் பெயர் பெற்ற பெருந்துறை என்பது ஊர்ப்பெயராகவும். கோகழி இவ்வூரிலுள்ள கோயில் என்றும் கொண்டு மாணிக்கவாசகர் கோகழி எனக் குறித்தது திருப்பெருந் துறைக் கோயிலையே என்று மு. அருணாசலம் முடிவு செய்தார்.[7]

கோகழி என்பதற்கு புதிய விளக்கம் :

திருவாசகத்திற்கு உரையெழுதிய சுந்தர மாணிக்க யோகீஸ்வரர், 'கோகழியில் தண்டமும் சக்கரமும் அடங்கியிருக் கின்றன' என யோகப் பொருள் உரைத்து,

'மேலா நிலத்தெழு விந்துவும் நாதமுங்
கோலால் நடத்திக் குறிவழியே சென்று
பாலாம் அமிர்துண்டு பற்றறப் பற்றினால்
மாலா னதுமாள மாளுமவ் விந்துவே'[8]

என்னும் திருமந்திரப் பாடலையும் மேற்கோள் காட்டி விளக்கம் கூறினார். ஆயினும் அவர் உரை எளியோர்க்குத் தெளி வில்லாததாய் அமைந்தது

திருவாசகமும் சிவராஜயோகமும் என்ற நூலையெழுதிய திருவாரூர்ச் சிவயோகி மா. இரத்தின சபாபதி பிள்ளையவர்கள் தமது நூலில் கோகழி என்னும் சொல்லுக்குத் தரும் யோகப் பொருள் புதிய விளக்கமாகத் திகழ்வதை உணரலாம்

'கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க'
கோ-அரசன்: கழி-கோல்; குருமணி-ஒளிவிட்டு நிற்பவன்.

தேகத்தின் ஆன்மா அரசன் ஆன்மாவின் தலைவன் இறைவன். இறைவன் ஆன்மாக்களைச் செலுத்தும் கோல் என்பது, மூலா தாரத்தையும் சகஸ்ரதளத்தையும் இணைத்து நிற்கும் முதுகந் தண்டாகும். இந்த முதுகந்தண்டின் அடிப்பாகத்தில் மூலாதாரச் சக்கரம் உள்ளது. மேல்பாகத்தில் சகஸ்ரதளம் உள்ளது. இதில் இடகலை, பிங்கலை, சுழுமுனை என்று மூன்று நாடிகளும் உள்ளன. சிவன் உயிர்கள் அறியாமையில் உள்ளபோது அவற்றை இடாநாடி, பிங்கலா நாடி என்ற அவனது திருவடியால் நடத்துகிறான். ஞானியானபோது இருநாடிகளின் தன்மையும் மாறிச் சுழுமுனா நாடி பிரகாசத்தை அடைகிறது"[9] என்னும் சிவயோகியின் விளக்கம் சிந்திக்கத் தக்கது.

ஆன்மா குருவருளால்தான் ஞானத்தைப் (ஒளியைப்) பெற முடியும். ஆன்மாவிற்கு ஒளி வழிகாட்டி, யோக சாதனையைச் செய்வதற்குரிய பயிற்சியை அளித்தல்தான், குரு ஆன்மாவை ஆட்கொள்ளலாகக் கருதப்படுகிறது. இச் செயலுக்குரிய இடம் (தீட்சைக்குரிய இடம்) புருவ நடுவாகிய சுழுமுனைத் தலம். இத்தலத்தில் இறைவன் ஒளிமயமாக நின்று ஆன்மாவுக்கு இன்பத்தை வழங்குகின்றான். இவ்வாறான கருத்துக்களை யோக நூல்கள் விரிவாகப் பேசுகின்றன.

> "இரு மூக்கினுட் செல்லுகின்ற பிராணனை அந்நடு நாடியில் நன்கு தடுத்து நிறுத்துவாயாக. அந்நாடியில் பிராணன் நீடித்து நிலைபெறுதலை அனுபவித்த பின்னர் மெதுவாகவே வெளியில்விடப் பயில்வாயாக. குதத்தினது பின்பக்கத்தில் வீணாதண்டத்தைப் போன்று ஓரெலும்பு உளது. அதுவே உடலைத் தாங்கி நிற்பதாகும். அந் நீண்ட எலும்பானது உடலை அளந்து நிற்கின்றது. அவ் வெலும்பையே பிரம்ம தண்டமென்று சொல்லப்படுகிறது. அதனுள்ளில் அதிசூக்குமமான துவாரமுள்ள சுழுமுனா நாடி உள்ளது. அக்சுழுமுனா நாடியே அறிஞர்களால் பிரம்மநாடி எனக்கூறப்படுகிறது. அந்தப் பிரம்ம நாடியே இடை பிங்கலைகளின் மத்தியில் சூரிய வடிவாய் விளங்குகின்ற சுழுமுனா நாடி என்று அறிக"[10].

என்பது யோக சிகோபநிடதம்.

ஆகவே, மூலாதாரம், சகஸ்ரதளம் என்னும் இரண்டையும் இணைக்கும் முதுகந்தண்டாகிய கோல் வழியே ஆன்மாவை ஆட்கொண்ட குருமணியின் திருவடிகள் வாழ்க என்பது புதிய விளக்கமாக அமைகின்றது. ஆதலின் கோகழி என்னும் சொல் உடம்பின் (ஆன்மாவின்) முதுகந்தண்டினைக் குறிக்கும் என்னும் சிவயோகியின் கருத்து சிந்தனைக்குரியது.

முடிவுரை :

இதுகாறும் கண்டவற்றால் கோகழி என்ற சொல்லுக்கு அறிஞர்கள் கூறிய நான்கு வகையான ஊர்ப்பெயரைக் குறிக்கும் கருத்துக்களையும், இக்கருத்துக்களுக்கு மாறாக, யோக அடிப்படையில் கூறப்பட்ட கருத்தினையும் அறிய முடிந்தது. இக் கருத்துக்களின் உண்மை மேலும் ஆய்ந்து அனுபவத்திற் காணத் தக்கது.

அடிக் குறிப்புக்கள்

1. கோ. வன்மீகநாதன், **மாணிக்கவாசகர்**, பக்கம் 28
2. துறைமங்கலம் சிவப்பிரகாசர்,
   நால்வர் நான்மணிமாலை, பாடல்-4
3. மு. அருணாசலம், **திருவாசகம் ஆராய்ச்சிக் குறிப்புக்கள்**, பக்கம் 31-35.
4. மேற்படி நூல் பக்கம் 36-37
5. மேற்படி நூல் பக்கம் 41-43
6. மேற்படி நூல் பக்கம் 44-49
7. மேற்படி நூல் பக்கம் 90-51
8. திருமந்திரம் பாடல் 1956
9. சிவயோகி மா. இரத்தின சபாபதி பிள்ளை,
   திருவாசகமும் சிவராஜ யோகமும் பக்கம் 25
10. யோக சிகோபநிடதம், 6– 6—9

துணை நூல்கள்

1. திருமந்திரம்
2. திருவாசகம்
3. துறைமங்கலம சிவப்பிரகாச சுவாமிகள்,
   நால்வர் நான்மணிமாலை, கழகம், சென்னை, 1960
4. அருணாசலம் மு. **திருவாசகம் ஆராய்ச்சிக்குறிப்புகள்**
   சைவசித்தாந்த மகா சமாஜ அறுபதாண்டு நிறைவு விழா மலர், சிதம்பரம், 1965.
5. இரத்தினசபாபதி பிள்ளை, மா., சிவயோகி,
   சிவராஜ யோகமும் திருவாசகமும்,
   முதல் பதிப்பு, 1973.
6. யோகசிகோபநிஷத், பழனி ஸ்ரீசாதுமுனிவரின் சீடர்
   திரிமூர்த்தி சுவாமி தமிழ் உரை,
   ஸ்ரீ சரஸ்வதி வளாக வெளியீடு, 1957
7. வன்மீகநாதன் கோ. **மாணிக்கவாசகர்**
   சாகித்திய அக்காதெமி, புதுதில்லி,
   முதல் யதிப்பு, 1983.

அண்ணாமலை ரெட்டியாரின் சீட்டுக்கவி இலக்கியம்

முனைவர் தா. ஈசுவரபிள்ளை,
முதுநிலை விரிவுரையாளர்,
இலக்கியத்துறை,
தமிழ்ப்பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் 613 005.

தென் பாண்டிச் சீமையில், நெல்லை மாவட்டத்தில், சென்னி குளம் என்ற சிற்றூரில் சென்னவ ரெட்டி யாருக்கும், ஓவு அம்மாளுங்கும் மகனாகக் கி.பி. 1861-ல் அண்ணாமலை ரெட்டியார் பிறந்தார். இவர் தமிழுக்குப் பல இலக்கிய வகைகளைப் படைத்து அணி செய் துள்ளார். அந்தாதி, வெண்பா, சீட்டுக்கவி, கட்டளைத் கலித்துறை, கட்டளைக் கலிப்பா, எண்சீர் விருத்தம், ஆற்றுப்படை, காவடிச் சிந்து போன்ற இலக்கிய வகைகளில் பல இடத்தைப் பெற்றுள்ளார். அண்ணா மலை ரெட்டியார் படைத்துள்ள சீட்டுக்கவி இலக்கியம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

1. சீட்டுக்கவி

கவிஞர்கள் தம் உள்ளத்தின் எண்ணங்களைக் கவிதை வடிவில் எழுதிப் பிறருக்கு வெளிப் படுத்தும் இலக்கிய வகை சீட்டுக்கவி எனக்கூறலாம்

ஒருவர் தம் கருத்தை அல்லது வேண்டுகோளை பிறர்க்குத் தெரிவிக்க தூது அனுப்பும் மரபை இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

எனவே தகவல் தொடர்பு நிலையில் தூது இலக்கிய பொருண்மையும், சீட்டுக்கவி இலக்கியப் பொருண்மையும் ஒத்த நிலையில் அமைந்துள்ளன எனக் கருதலாம். (ந. வீ. செயராமன், ப. 131)

சிலப்பதிகாரத்தில், கோவலன் ஊடிச்சென்றமையால் தனித்தேகிய மாதவி காமதேவனாணையால் உலகு

தொழுதிறைஞ்சும் திருமுகம் விடுப்பேம் என்னும் எண்ணத்தால், சண்பகம் முதலியவற்றால் தொடுக்கப்பட்ட மாலையின் இடையேயுள்ள தாழை வெண்தோட்டில் அதற்கு அயலதாகிய பித்திகை அரும்பை எழுத்தாணி யாகக் கொண்டு செம்பஞ்சியிலே தோய்த்து எழுதுகின்ற மையையும், (வேனிற்காதை), மாதவியால் விடுக்கப்பட்டு வந்த கௌசிகன் மாதவியின் ஓலையைக் கோவலனிடம் கொடுக்கின்றமையையும் (புறஞ்சேரியிறுத்த காதை) இளங்கோவடிகள் காட்டுகின்றார்.

இவ்வாறு இலக்கியத்தில் ஓர் அங்கமாக விளங்கிய சீட்டுக்கவி ஆலவாய்ப் பெருமானாகிய சோமசுந்தரர், பாணபத்திரர் என்ற அடியவர்க்காகச் சேரமான் பெரு மாள் நாயனாருக்கு எழுதிய திருமுகப்பாசுரம் மூலம் தனியான இலக்கிய வகையாயிற்று எனக் கருதுவர் (ந. வி. செயராமன் ப. 134) பின்னர், சேறைக்கவிராசர், மாம்பழக் கவிச்சிங்க நாவலர், காளமேகப் புலவர், அந்தகக் கவி வீரராகவர், மகாகவி பாரதியார் போன் றோர் இவ்விலக்கிய வகை வளர்ச்சிக்கு உதவியவருள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

2. அண்ணாமலை ரெட்டியாரின் சீட்டுக்கவிகள்

அண்ணாமலை ரெட்டியார் தம்மை ஆதரித்த மருதப்ப பாண்டியர்மீது ஏழு சீட்டுக்கவிகள் இயற்றிய மையை அறியமுடிகின்றது. இவற்றுள் 91 பாடல்கள் இடம்பெறுகின்றன. சீட்டுக்களயைக் கரலிகிதம் (4:14) நிருபம் (5:8, 5:9, 5:11), திருமுகம் (5:13) என்ற பெயர்களால் சுட்டுகின்றார்.

2.1 காரணங்கள்

அண்ணாமலை ரெட்டியார் இச்சீட்டுக் கவிகளை எழுதியமைக்கான காரணங்களைக் கீழ்வருமாறு சுட்டலாம்.

1. பொருளுதவி வேண்டல் 2. மருத்துவ உதவி வேண்டல் 3. தன் நிலை கூறல் 4. பதில் கடிதம் வேண்டல் 5. நன்றியைப் புலப்படுத்தல் 6. பிழை பொறுக்க வேண்டல்.

2 2 சீட்டுக்கவியின் பாடுபொருள்கள்

2.2.1. தலைவர் பெருமைகள் கூறல்

பாட்டுடைத் தலைவரிடமிருந்து பொருள் வேண்டல், தன் நிலை கூறல் போன்றவை சீட்டுக்கவிகள் இயற்று வதற்குரிய அடிப்படைக் காரணங்களாக அமையினும், தலைவனின் பல பெருமைகளை எடுத்து மொழிதல் என்பது சீட்டுக்கவிகளில் இன்றியமையாத இடம் வகிக் கின்றமையை அறிய முடிகின்றது. இவ்வகையில் அண்ணாமலைரெட்டியாரும் மருதப்பரின் பல்வேறு பெருமைகளை விளக்குகின்றார்.

2.2.1.1 கொடைப்பண்பு

மருதப்பரின் கொடைவண்மையைக் கண்டு கற்பகச் சோலைகள் வறுமையடைவதாகவும், மேகங்கள் அஞ்சி ஓடுவதாகவும், காமதேனு மனம் கன்றிப் போவதாகவும் காட்டுகின்றார். (1:8) யமகக் கவிகளைப் பாடும் பாவலரைக் கனவில்கூட மறக்காமல் ஆட்கொள்கின்றமை (1:9), பரிசளிக்கின்றமை (1:12) புலவர்கள் உலோபர் களை அணுகாமல் காக்கின்றமை (2:2), தமிழ்ப்புலவர் களுக்குக் கொடுப்பதால் அவன் கைகள் தாமரைமலரை விடச் சிவந்து தோன்றுகின்றமை (2:5), தமிழ்ப்புலவர் களின் வறுமை அச்சத்தை நீக்குகின்றமை (3:1), சிவ பெருமான் அளித்த புதையல்போல் அவதாரம் செய்தமை (4:4), புலவர்க்குப் பொன் மலர்களைக் கொடுக்கின்றமை (4:9) என அவன் கொடைப் பெருமைகளைப் பலவாறு புகழ்ந்து கூறுகின்றார்.

2.2.1.2 ரச்சிறப்பு

கலவி செய்யும் பெண்களின் நகக்குறியாலான வடுக்களையன்றி வேறு வடுக்கள் இல்லாதவன் என்றும் (1:6), பகைவர்களாகிய ஆடுகளை வென்ற புலி போன்றவன் என்றும் (1:10), பல நாட்டு மன்னர்களும் வந்து பணிவதால் சிவந்த பாதங்களையுடையவன் என்றும் (1:12, 2:5) பகைவர் தலைக்களைத் துணித்து, நெய்யில் குளித்து, உறையுள் புகும் வளையுடையவன் என்றும் (4:5), பல மல்லர்களைத் தோல்வியுறச் செய்தவன் என்றும் (4:9) அவன் வீரச்சிறப்பும், வெற்றிச்சிறப்பும் கூறப்படுகின்றன.

2.2.1.3. கல்விச் சிறப்பு

மருதப்பர் தெலுங்கு, உருது, கன்னடம், வடமொழி, கரும்பு கூடக் கசக்கும்படி இனிமை தரும் தமிழ், வியாகரணம் கற்ற அனுமனுக்கும் தெரிவரிய கலைகள் ஆகியவற்றில் தேர்ந்தவர் என்றும் (3;5), கவிஞர் கூட்டம் ஏட்டில் பிறர் காணமுடியாதபடி புதைத்து வைத்த நுண்பொருள்களைக் கண்டுபிடிக்கும் அஞ்சனமை போன்ற விவேகம் உடையவன் என்றும் (5:6), அகத்தியனும் கம்பனும் தொழும் தகுதியுடைய கல்விச் செல்வம் நிரம்பியவன் என்றும் (5:14) புகழ்கின்றார்.

2.2.1.4. தமிழ்ப் பற்று

பல மொழிகளையும், கலைகளையும் கற்ற மருதப்பர் தமிழின்மீது எல்லையில்லாத பற்றுடையவர் என்பதைப் புலவர் எடுத்து மொழிகின்றார். புலவர்களின் மழலைச் சொற்களைக் கேட்டு மகிழ்பவன் (3:5); கம்பநாடனும் தலையசைத்துப் பாராட்டும்படி கலைகளை உணர்ந்தவன் (4:5); புலவர்களின் பாட்டுக்கு அருளும் பெருங்கருணை உடையவன் (4:6) எனப்பலவாறு புகழ்கின்றார்.

2.2.1.5. இறைப்பற்று

மருதப்பர் கண்ணன் (1:1, 1:3, 4:1, 5:1, 5:2 ,) திருமால்(1:2, 1:5, 5:2, 5:3, 6:4), இராமன் (4:1,5:2,5:3), சிவபெருமான் (4:1, 6:2, 6:3), நவநீத கிருட்டிணன் (4:1), முகுந்தப்பெருமான் (5:4) ஆகிய கடவுளரிடம் மிக்க ஈடுபாடு கொண்டவர் எனக் காட்டுகின்றார். இதனால், மருதப்பர் வைணவச் சார்புடையவராயினும், சைவ சமயக் காழ்ப்பற்றவர் என்பதையும் சுட்டுகின்றார்.

2.2.1.6. ஆட்சிச் சிறப்பு

தென்னாடாகிய தமிழ்நாட்டை இந்திரன் உலகை விடச் சிறப்படையும்படி ஆள்கின்றவன் (1:10) என்றும் செங்கோல் நடத்தும் அதிசயப்பூமான் (3;3) என்றும், ஆதிசேடனின் சுமை குறையும்படி தானே தாங்கியவன் (3:6) என்றும் அவன் ஆட்சிச்சிறப்பைச் சுட்டுகின்றார்.

2.2.1.7. உறுப்பு நலன்கள் -அழகு

மருதப்பரின் தோள்கள் [1:7, 2:3, 3:4, 3:6, 6:1] கைகள் [1:8, 2:5, 3:4], மார்பு [1:8, 1:12, 2:4, 5:13] காதுகள் [2:3, 3:5, 5:10,] பாதங்கள் [2:6], பற்கள் [3:4] முகம் [3:4 5:13,] ஆகிய உறுப்பு நலன்களை விளக்கும். கவிஞர் அவர் மன்மதன் போன்றவர் [1;3, 2;7, 4:9, 6:1, 6:4] என்றும் மன்மதனுக்கும் அவாவை உண்டாக்கும் அழகுடையவன் என்றும்,[5:6] புகழ்கிறார்.

2.2.2. நகர் வருணனைகள்

பாட்டுடைத் தலைவரின் நகராகிய ஊற்று மலையில் காணப்படும் சோலைகள் [1:12], வீடுகள், கோபுரங்கள், மதில்கள் [3;3], இயற்கை வளம் [5:12] நீர்வளம் [6:2] முதலியனவற்றைக் கவிஞர் அழகுற வருணிக்கின்றார்.

2.2.3. அழைத்தல்

சீட்டுக்கவிகளில் மருதப்பரை அவருடைய பல்வேறு பண்புகளும் வெளிப்படும் வண்ணம் மேலோய் [1:5], உசிதா, அயிலா, கண்ணா [2:2], செங்கண் மாலே [3:1]

கம்பனுக்கு ஒப்பானே [3:2], துரைப்பூமானே [4:13], இருதயாலயபதி [5:7], நல்நிருபகுலதிலக [5:9], நராதிப [5:9], புவி அதிபதியே [5:10], இருதயாலய பூபாலா [5:14], வீளரக்குணபூமானே [5:15], கிளுவை மருதப்ப [6:2], எனப் பல் நிலைகளில் அழைக்கின்றார்.

2.3. சீட்டுக்கவிகள் இயற்றியதன் நோக்கங்கள்

தலைவனின் பல்வேறு பெருமைகளை எடுத்து மொழிந்துவிட்டு, சீட்டுக்கவி எழுதியமையின் நோக்கத்தை இறுதியில் குறிப்பிடும் அமைப்பை அறிய முடிகின்றது.

2.3.1. வீடு கட்டித்தர வேண்டல்

மருதப்பரின் பெருமைகளைப் போற்றி மகிழ்ந்த கவிஞர் ''ஒரு விண்ணப்பம் வழுத்தக்கேள்'' எனக் குறிப்பிட்டு, ''கையிலே சங்கினை விளங்கும்படி தரித்த நவநீத கிருஷ்ணப் பெருமானுக்கு நான் சொன்ன தமிழ் நூல் களுக்குப் பிரதியுபகார்மாகச்,

''சுணத்தில் அகம் ஒன்று புரிவித்து உனது
பெருங்கருணை சூட்டுவாய்'' [1:13]

எனக் காரையில் கட்டப்பட்ட வீடு ஒன்று செய்வித்துத் தர வேண்டுகின்றார்.

2.3.2. பணம் வேண்டல்

தம் வறுமை நிலை தீரப் பணம் வேண்டும் நிலையையும் காணமுடிகின்றது.

'' ...... எனது இல் செலவுக்காக
நூறு ரூபாய் விரும்பி எனக்கு அளிப்பாய்'' [2:7]

''என் அகத்துக்குப் பணம் தந்திடக் கருணை
முழுதினும் வைத்து இரட்சிப்பாய்'' [3:6]

என வேண்டுகிறார்.

2.3.3. பொற்சரிகை வேண்டல்

மற்றொரு சீட்டுக்கவியில் [6:2] கவிஞர் மருதப்பரிடம்

"மருதப்ப மன்பொற் கோட்டுத்
துண்டுதரக் கருத்திரக்கம் செய்"

என வேண்டுகின்றார்.

2.3.4. மருந்து அனுப்பி வைக்க வேண்டல்

நோயினால் அல்லலுற்ற கவிஞர் மருதப்பரிடம் மருந்து அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றார்.

"நுகரும் கருணைக் கந்தரசம் விழைந்தனன்
அருள் ஒரு திங்கட்குத் தானே" [6:4]

என ஒரு மாதத்திற்குப் போதுமான கருணைக் கிழங்கு இலேகியம் அனுப்பி வைக்குமாறும்,

"என் உடல் தளர்ச்சியில்லாமல் நலம்பெற்று நிலவும்படி மருந்துக் கவசம்[மாத்திரை]தருவாயாக" [6:5] என மாத்திரை அனுப்பி வைக்குமாறும், உண்ட உணவு எல்லாம் நன்கு சீரணிக்க ஏற்ற மருந்து இருந்தால் அனுப்பி வைக்குமாறும் [5:17] வேண்டுகின்றார்.

2.3.5. தன் நிலை குறித்து எழுதியனுப்புதல்

மருதப்பரிடமிருந்து விடைபெற்றுச் சென்னிகுளம் சென்றபின் தன் நிலை என்ன என்பதை விளக்கியும் சீட்டுக்கவி ஒன்று எழுதியுள்ளார் [4:11-14]. "சென்னி குளம் வந்தபின், தலையெழுத்துப்படி பிறந்து, சொல்லுக்கு அடங்காத துன்பத்தை உண்டாக்கி, பொருளைப் பலவித மாகச் செலவு செய்யும்படி செய்வித்த அந்த அரையாப்பு நோயால் யான்பட்ட துன்பம் சொல்லமுடியாது. நோய் முற்றியதால் உடலழகு சிறிதும் இல்லாமல் போனது. பல மருத்துவர்கள் செய்த மருத்துவத்தாலும், அவர்கள் சொற்படி மேற்கொண்ட பத்தியத்தாலும் உடல் மிகவும்

இளைத்துவிட்டது. இந்நோய் தீர்ந்தபின் தென்கேரளம் புதூர் வருவேன். அங்கு உன் முகதரிசனத்தின் பொருட்டுப் பத்து நாட்கள் வருவேன் என்று யான் சொல் லியசொல் இந்நோயால் தவறிப்போனது. என் பாடல்கள் உன் காதுகளில் படவேண்டும் என்ற பெருவிருப்புடன் என் நோய்த் துன்பத்தைப் பொருட்படுத்தாமல் இவ்வாறு சீட்டுக்கவி எழுதலானேன். கலைமகள் மேல் ஆணை யிட்டுக் கூறுகின்றேன். அச்சீட்டுக் கவிக்குப் பதில் உன் கைப்பட எழுதிய கடிதம் அனுப்பித்தராவிடில் எனக்குக் கவலை தீராது. பதில் தந்தால் மிகப் பேரின்பம் உண் டாகும்'' எனக் குறிப்பிட்டுள்ளார். மற்றொரு சீட்டுக் கவியில் [5:14-16], ''மதி மயக்கத்தால், முற்காலத்துப் பண்ணிய தீய செயலினால் வந்த பிணியானது ஆறு மாதங்களில் தீர்ந்தது. அதன் பின் வந்த காய்ச்சற் பிணியால் இரு மாதங்கள் வருந்தினேன். சுரம் தணிந்து சுகம் பிறந்தது. வீரை நகர்க்குத் திருவிழா காணவும், என் கவி கேட்டு நீ தலையசைப்பதைப் பார்க்கவும் திருமால் அழியாத அருள் செய்வானெனில் நான் தடை யின்றி வருவேன்'' என எழுதியுள்ளார்.

2.36. நன்றியைப் புலப்படுத்துதல்

தன்னை ஆதரித்த மருதப்பருக்கு நன்றி கூறும் வகை யில் இயற்றிய சீட்டுக்கவியும் உள்ளது. [5:8-13] அதில், ''அச்சமாகிய கடலை நான் கடந்து கரையேறும் பொருட்டு நீ அருளிய சுபமான கடிதம் உவமை சொல்லத் தக்கதன்று. 'எப்போதும் இன்பமுடன் முதன்மை பெற்று இருப்பாயாக'. பகவன் உனக்கு கருணை செய்வான் என்ற வாழ்த்து மொழிகளைப் பெய்து உன் திருக்கரங்கள் எழுதிய எழுத்துக்களைக் கண்டு நோயால் வந்த தளர்ச்சி முழுதும் பறந்து போனது. உன் கடிதம் கிடைத்தமை-யால் உடற் பிணி முழுதும் தீர்ந்து மேலான இன்பம் பெற்றேன். அதற்குக் கைம்மாறாக என் உடலையும்

உயிரையும் தந்துவிட எண்ணினேன். ஆனால், அவை உன்னுடையவையாகையால் அவற்றைத் தருவதில் என்ன பயன் என எண்ணினேன். உன் அருள் முகத்தைக் கண்டாற்போன்ற மகிழ்ச்சியில் திளைக்கும்படி கடிதம் எழுதினால் மேற்கொண்டு நடக்கும் செய்திகளை உனக்கு விண்ணப்பித்துக் கொள்வேன்'' எனத் தன் உயிரையும் உடலையும் கொடுக்கத் துணியும் நன்றியறிதலைப் புலப் படுத்துகிறார்.

2.3.7. பிழை பொறுக்க வேண்டல்

மற்றொரு சீட்டுக்கவியில் [8:1]

''...... என்றும் என்றன்

கோதைப் பாராது ஆண்டு கொள்'' [7:1]

எனத் தன் குற்றம் பாராது ஆண்டு கொள்ள வேண்டு கிறார்.

2.3.8. மாறுபட்ட அமைப்பு

கவிஞரின் சீட்டுக்கவி ஒன்றில் [7], 28 பாடல்கள் தலைவன் பெருமைகளைக் கூறிப் பசலை நோயால், பிரிவுத் துயரால் வருந்தும் பெண்ணின் துயர் தீர அருளும்படி வேண்டும் மாறுபட்ட அமைப்பைக் கொண்டுள்ளமை இவண் சுட்டத்தக்கதாகும்.

2.4. கவிஞர் கையாண்டுள்ள இலக்கிய உத்திகள்

சீட்டுக்கவி இலக்கியம் நயமுடையதாக அமையவும், தான் கூற விரும்பிய கருத்துக்கள் சுவை பயக்கவும் கவிஞர் நிரல் நிரை, உவமை, உருவகம், சிலேடை, ஏகதேச உருவகம், தற்குறிப்பேற்றம், ஏகபாதம், மடக்கு, சொல்லடுக்கு, புராணக் கதைகள் போன்றவற்றை இலக்கிய உத்திகளாகக் கையாண்டுள்ளமை படித்துச் சுவைத்தற்குரியது ஆகும்.

இவ்வாறு, அண்ணாமலை ரெட்டியார் படைத்துள்ள சீட்டுக்கவி இலக்கியமானது சிறந்த இலக்கியக் கருவூலமாக, சுவைக் களஞ்சியமாக, பண்பாட்டைப் பறைசாற்றும் இலக்கியமாக, வரலாற்றைப் புலப்படுத்தும் வரலாற்று நூலாக, வாழ்வியல் இலக்கியமாகத் திகழ்வதுடன், சிறந்த தொலைத் தொடர்பு இலக்கியமாகவும் திகழ்கின்றது எனலாம்.

பயன்பட்ட நூல்கள்

1 காவடிச்சிந்து புகழ் சென்னி குளம் அண்ணாமலை ரெட்டியார் கவிதைத்தொகுப்பு, திருக்குறள் பதிப்பகம் சென்னை, 1989.

2. ந.வீ. செயராமன், இலக்கியக் கோவை, இலக்கியப் பதிப்பகம், சென்னை, 1980.

கதைகளும் - முடிவுகளும்

டாக்டர் இரா. சண்முகவேலன்,
எம். ஏ., எம். ஃபில்., பி. டி., பிஎச். டி ,
தேர்வுநிலைத் தமிழ் விரிவுரையாளர்,
அ. வீ. வா. நி திரு புட்பம் கல்லூரி
பூண்டி.

சிறுகதையின் முடிவைக் குறித்துப் படைப்பாளர்களும் திறனாய்வாளர்களும் கருத்துரைத்துள்ளனர். காதரின் அன்னி போர்ட்டர் (Katherine Anne Porter) எனும் மேலை நாட்டுப் பெண் எழுத்தாளரை நேர்முகப் பேட்டி கண்டவர், 'நீங்கள் ஒவ்வொரு கதையும் முடிவுடன்தான் தொடங்குகிறது என்று ஒருபோது கூறியிருக்கிறீர்கள் ; அத்துடன் கதையின் முடிவு தெரிகிறவரை அங்கே கதை இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள்'' என்று கூறி அதைப்பற்றி வினவினார். அதற்கு அவர்,

> If I did n't know the ending of a story, I would n't begin. I always write my last lines, my last paragraph, my last page first, and then I go back and work forwards it. I know where I'm going. I know what my goal is. And how I get there there is God's grace.
>
> (Writers at work, P. 129)

என்று பதிலுரைத்தார். முதலில் கதையின் முடிவினை எழுதிவிட்டுத்தான் அடுத்தபடியாக அதன் ஆரம்பத்தை எழுதத் தொடங்குவதாய்த் தனது பயிற்சியைக் கூறுகிறார். புதுமைப் பித்தன்,

> கதை முடியும்பொழுது அதைப் பற்றிய சிந்தனை முடிவடைந்துவிடாது. இப்படிப்பட்ட கதைகள் முடிந்த பிறகுதான் ஆரம்பமாகிறது என்று சொன்னால் விசித்திரமாகத் தோன்றும், ஆனால், அதுதான் உண்மை.
>
> (புதுமைப் பித்தன் கட்டுரைகள், ப. 35)

என்கிறார். இவரின் கருத்தின்படிக் கதையின் முடிவில்தான் அந்தக் கதையின் தொடக்கமே இருக்கிறது என்பது தெளிவாகிறது. டாக்டர் இளந்திரையன்,

எல்லோரும் காணும் வாழ்க்கையை எடுத்துக் காட்டி, முதலுக்கும் முடிவுக்கும் ஓர் இழைத் தந்தியைக் கட்டி விடுகின்றது சிறுகதை. அந்தத் தந்தியின் முடிவைத் தட்டிவிட்டால் முழுக்கதையும் எழுந்து விடுகின்றது.

(தமிழில் சிறுகதை, ப. 112)

என்றும், டாக்டர் கோ. கேசவன்.

கதையின் முடிவு இரண்டு வகைகளில் அமையலாம்,

1 வெளிப்படையான முடிவு

2. உய்த்துணர் முடிவு

(தமிழ்ச் சிறுகதைகளின் உருவம், ப. 27)

என்றும் கூறுவர் எப்படியாயினும் கதையின் முடிவு கதையின் தொடக்கத்தைப் போன்று கவனத்திற்கும் களிப்பிற்கும் உரியதாகின்றது.

கதைகளைப் படிக்காமல் நேரிடையாகவே கதைகளின் முடிவுகளைக் காண்போம்.

1. அந்தப் புறாக்கள் இன்னும் சிறிது நாட்களுக்குப் பறக்க விரும்பினேன்.

(ட்டி. எம். நந்தலாலா, 'மனிதர் மிருகம் தவிர', நாலுபேரும் 15 சிறுகதைகளும்)

2. அப்புறம் இன்னா மச்சிங்க மண்ணு வெட்டிப் பாத்தி கட்ட, மாமா தண்ணி ஊத்தினார் போயேன். இன்னா கௌம்பீட்டியா வூட்டுக்குதானா. இன்னா நேரா டிரைவின்னா. வூட்டுக்கு எத்தினி மணிக்கிதான் போவ. ஒன்றயா. இதுக்கு மச்சியே பெட்ரு. கடைசி வண்டி புடிச்சாலும் பன்னொண்டு இருபத்தஞ்சிக்குத் தாம்பரம். சரி, ஒரு பத்து ருபா இருந்தாத் தள்ளு. சேல்றி டே அன்னிக்கி மச்சி செக்கா வெட்டிடுவாரு. பரவால்ல அந்த அஞ்சக் குடு. நூத்தம்பதுல இன்னிக்கி அட்ஜஸ்ட் பண்ணிக்கிலாம். தேங்க்ஸ். குட்நைட்.

(விமலாதித்த மாமல்லன். 'புறப்பாடு' முடவன் வளர்த்த வெள்ளைப் புறாக்கள் மற்றும் பிற கதைகள்)

3. ' ....'

"என்ன ஒண்ணுஞ் சொல்ல மாட்டேங்க ? "

(வண்ணதாசன், 'அடங்குதல்'
பெயர் தெரியாமல் ஒரு பறவை)

4. சாப்பிட உட்கார்ந்து சும்மா கிளறினான். ஒப்புக்கு அள்ளி கட்டாயத்துக்கு குடித்தான். மூலைக்குப்போய் மோட்டுவளையைப் பார்த்தான். "என்னாயா ... ... பொண்டாட்டிய பறி குடுத்தவனாட்டம் நீம் பாட்டுனு போய் குந்திக்க குத்துக் கல்லாட்டம் எது ? இருக்க சொல்லவே ! "

(ஆர். இராஜேந்திர சோழன், 'கோணல் வடிவங்கள்'.
எட்டு கதைகள்)

5. குமாரி சுதா நாகராஜன் புன்னகைத்தவாறே எழுந்து வெளியே வருகிறாள். அதிர்ஷ்ட ஆறு பிரவாகமாக ஓடு வதைத் தன் மனக்கண்ணால் கண்டு ரசித்தவண்ணம் கைப்பையை வீசிக்கொண்டு, வேகமாகப் படிக்கட்டு களில் இறங்கி நடக்கிறாள். 'அப்பாவுக்கு மிகவும் திருப்தியாக இருக்கும். மாமாவுக்கும் நன்றி சொல்ல வேண்டும் ... ...'

(ஆனந்தம் கிருஷ்ணமூர்த்தி,
'அதிர்ஷ்டம் என்னும் ஆறு', தீபம் கதைகள்)

6. சாருக்கு,

வணக்கம் !

'நிழல், கதையை நானும் என் கணவரும் படித்தோம் !
தங்கள் கதையை விமர்சிக்க எனக்குத் தகுதி இல்லை !
ரொம்ப நல்லாயிருக்கு ... ... !
எங்களுக்குப் பிடிச்சிருக்கு ... ... !
ஒரே ஒரு குறை இப்போ நாங்கள் சேர்ந்து
வாழ்றதைப் பற்றியோ,
எங்கள் இரண்டு கண்மணிகளைப் பற்றியோ
ஒரு வார்த்தை கூட இல்லை ... ...
எங்கள் அன்பும் வணக்கமும் தங்களுக்கு என்றென்றும்!

சந்தானலட்சுமி

(தனுஷ்கோடி ராமசாமி, 'நிழல்',
நிழலும் ஒரு கவிதையும்)

7. கொலையும் செய்வாள் பத்தினி என்ற பழமொழி உண்மைதானா ? யாருக்குத் தெரியும் ?
(அ. ராஜமோகன், 'பழமொழி உண்மைதானா ?' புகை நுழையாத இடத்தில்)

8. அந்த காத்திருப்பு - பொய்க்கக்கூடாது என்பது போல் கடலில் அலைகள் அன்றைக்கும் பாடிக்கொண்டிருந்தன
(சூர்யகாந்தன், 'சிறகுகள் சுமைகளல்ல...' இனி பொறுப்பதில்லை)

9. பிரம்மாஸ்திரங்கள் கூட ஞானிகளைக்
கட்டுவதில்லையாம்
(திலகவதி, 'பிரம்மாஸ்திரம்', அரசிகள் அழுவதில்லை)

10. இனி இந்த வேர்கள் உயிர்க்கா
(டாக்டர் மா. இராமலிங்கம், 'மண்ணில் உயிர்க்கும் வேர்கள்', நாளைக்கும் இதே கியூவில் ...)

11. ஞானம் போதி மரத்தடியில் மட்டும் பிறப்பதில்லை. பராசக்தியின் வடிவமான பெண்கள் நினைத்தால் படுக்கை அறையிலும் ஞானத்தை வழங்கிட முடியும்.
(மா. கமலவேலன், 'படுக்கையறை ஞானம்', நந்தவனப் பூ)

12. பேசிக்கொண்டிருந்த கணவனைக் கண்களை விரித்துப் பார்த்து கொண்டிருந்தாள் கற்பகம்.
(ஜெயரதன், 'இரு முகங்கள்', யுகதர்மம்)

13. மெல்லக் கன்னத்தை அழுத்தித் தொட்டுப் புறப்பட்டவன் இவன். சுருங்கிய சாக்லெட் தாளைக் கீழே போட்டுவிட்டு இவனுக்கு டாட்டா காட்டியது தேன்மொழி.
[பாவண்ணன், 'முள்', முள்]

14. முன் வரிசையிலிருந்த 'நாஞ்சில் முரசு' 'குமரிச்சுடர்' நிருபர்கள் அவசர அவசரமாகக் குறுக்கெழுத்தில் எழுத ஆரம்பித்தனர்.
[நாஞ்சில் நாடன், 'காக்கன் குளமும் முருங்கை மரமும்', தெய்வங்கள், ஓநாய்கள், ஆடுகள்]

15 வெள்ளாடுகள் குழைகடிப்பதில் அமைதி கண்டிருந்தன.
(பூமணி, 'மீதி', மீதி)

16 தூரத்து தியேட்டரில் 'மாட்னி' காட்சிக்காக ரிகார்ட் போட ஆரம்பித்தார்கள். நாதஸ்வர சப்தம் வெயிலில் நிறைந்து கொண்டிருந்தது (கௌரிஷங்கர்; 'காலண்டர்', மூந்நூறு யானைகள்)

17. வெளியே வாசலில் பசேலென்று படர்ந்த மல்லிகைப் பந்தலுக்குக் கீழே சற்றுமுன் ராஜாத்தியின் கையிலிருந்து விழுந்து சிதறிய மல்லிகைப் பூக்கள் மண்ணில் கேட்பா ரற்றுக் கிடந்தன. (தேவபாரதி, 'பெண்ணே. ஜாக்கிரதை !', வேர் இல்லாத செடிகள்)

18 மழை மேகம் கலைந்த வானம் மிகத் தெளிவாக இருந்தது.
(ந. முத்துசாமி, 'மழைக்கோட்டும் கந்தல் குடையும்', நீர்மை)

19. அடுத்த நாள் காலை இவன் அந்த ஊரை விட்டு நீங்கி யிருந்தான். (சுரேஷ் குமார் இந்திரஜித், 'அலையும் சிறகுகள்' அலையும் சிறகுகள்)

20. தொழிலாளர் ஒற்றுமை ஜிந்தாபாத் !''
(மாலன், 'கூலி', இறகுகளும், பாறைகளும்)

21. கீதா ரகுவின் பிடிக்குள் தஞ்சம் புகுந்தாள் !
(லட்சுமிரமணன், 'அந்த ஒரு வார்த்தை ...... ! பிரம்மோபதேசம்)

22. நாற்காலியில் அமர்த்தி வைக்கப்பட்டிருந்த கௌரிப் பாட்டியின் பூத உடலுக்கருகில் கவலையே உருவாக உட்கார்ந்திருந்தார் முத்துவிநாயகம்.
(இளசை எஸ். சுந்தரம், 'சருகுகள்', சாதகப்பறவைகள்)

23. மூன்றாவது தடவையாக அவன் தன்னைக் குத்திக் கொள்ள முயற்சித்தபோது. அவன் கால்கள் தள்ளாடின. அவனது உடல் அவன் வீட்டில் சாய்ந்தது. சிறுவயதில் அவன் ஓடியாடிய அந்தத் தரையில் ரத்தம் குளமாகப் பெருகிப் பரந்தது.
(ம. ந. ராமசாமி, 'வீடு', வாழத்துடிப்பவர்கள்)

24. ''எந்த நாடைய ?'' (ஜெயபாரதி, 'தெருநாய்', கீதாஞ்சலி)

25. மனவிருப்பங்கள் விந்தையாகவே நிறைவேறும் உலகம் அவருக்குப் புதிராகத் தோன்றியது. இது நினைவுகளும் கனவுகளும் ஆகும் உலகம் அல்லவா ?
(டாக்டர் க, ரத்னம், 'நினைவுகளும் கனவுகளும்', சிறகுகள்)

26. அவரது பொக்கை வாயில் பூத்திருந்த புன்னகை சட்டென்று மறைவது போல் தோன்றியது !
(செங்கை செல்வராசன், 'பொக்கை வாயில் புன்னகை இல்லை', போராட்டம் புதியதல்ல)

27. நீங்கள் விரும்பினால் இப்போதும் அவளை அந்தக் கிராமத்தில் பார்க்கலாம்.
(பொன் · ஜெயந்தன், 'மொட்டை', குருத்து)

28. அந்த ஜன்னல் வடக்குப்புறம் பார்த்த ஜன்னல்,
(அம்பை, 'அணில்', வீட்டின் மூலையில் ஒரு சமையலறை)

29. ஆனால் இந்த ரமேஷ் ?
பரிதாபத்துக்குரிய அனாதை·
ஆனால் இனி இல்லை.
இனி ? அவளிருக்கிறாள்.
(பி. வெ. சுசிலா, 'மூன்று வர்க்கங்கள்', இளைய தலைமுறையில் இலக்கிய வீச்சுகள்)

30. வீட்டுக்குள் போய் மண் பானையிலிருந்து ஒரு 'போணி'த் தண்ணீரை மோந்து 'மேலுக்கு' ஊத்துகிறாள்; ஊத்திக் கொண்டே இ க்கிறாள். ஒரு பானைத் தண்ணீர் காலி· இருந்தும் அந்தத் தண்ணீர் அவளுடைய மனதில் எந்த விதப் பாதிப்பையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை உடம்பு சூடாயிருந்தால் பச்சைத் தண்ணீர் தவிக்கும்· ஆனால் மனம் சூடாயிருந்தால் ... ... ?
(டாக்டர் பொ. அழகு கிருஷ்ணன் 'மனச்சூடு', மழைக்கஞ்சி)

இவ்வெடுத்துக் காட்டுக்களிலிருந்து ஒவ்வொரு கதையினுடைய முடிவும் வெளிப்படுத்துகிற அல்லது புலப்படுத்துகிற கருத்துக் களைப் பின்வருமாறு அறியலாம்/சிந்திக்கலாம்.

(தொடரும்).

பண்டைத் தமிழரின் விருந்தோம்பல் பண்பாடு

அத்திவெட்டி **வே. சிதம்பரம்**
பட்டுக்கோட்டை-614 602.

பண்பாடு மனித வாழ்க்கையின் அடிப்படை அம்சமாக விளங்கும் ஒன்றாகும். பண்பட்ட உள்ளத்தினரின் செம்மையான அறவாழ்க்கையைப் பண்பாடு நிறைந்த வாழ்க்கை என்று கூறு கின்றனர். 'Culture' என்று ஆங்கிலத்தில் குறிக்கப்படுவதே பண்பாடு என்று தமிழில் கூறப்படுகின்றது. 'பண்படு' என்ற சொல்லிலிருந்து பண்பாடு என்ற சொல் உருவாக்கப் பட்டுள்ளது. நிலத்தை சாகுபடிக்கு தயார் செய்வதை பண்படுத்துதல் என்கி றோம். ஆங்கிலத்திலும் 'Cultivate' என்ற சொல்லே பயன் படுத்தப்படுகிறது. மனம் உயர் எண்ணங்களால் பண்படுத்தப் படும் நிலைமையை பண்பாடு என்று அழைப்பது பொருத்தமாக அமைகிறது.

பண்பாடு என்ற சொல்லை முதன்முதல் கையாண்டவர் ரசிகமணி டி. கே. சி. என்பர். வின்சுலோ பாதிரியார் 1862 இல் வெளியிட்ட தமிழ் – ஆங்கில அகராதியில் பண்பாடு என்ற சொல் இடம் பெறவில்லை. சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட Tamil Lexicon (1924 - 36) இலும் 'பண்பாடு' என்ற சொல் இடம் பெறவில்லை. இதன் பிறகே இந்தச் சொல் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

நாகரிகர்

பண்டைத் தமிழர்கள் நாகரிகம் என்ற சொல்லையே பண்பாடு என்ற பொருளில் பயன்படுத்தி வந்துள்ளனர். ''முந்தை'' இருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனி நாகரிகர் (நற்றிணை 355) என்று சங்க இலக்கியத்தில் கூறப் படுவதால் இது விளங்கும். ஆனால் இன்று நாகரிகம் என்பதற்கு வேறு பொருள் கொள்ளப்படுகிறது.

ஆங்கிலத்தில் Civilization என்று கூறுவதற்கு இணையாக தமிழில் நாகரிகம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நகரம் சார்ந்த வாழ்க்கை முறையை இச்சொல் குறிக்கிறது

என்பர். எளிமைப் படுத்திச் சொன்னால் புற வாழ்க்கையை நாகரிகம் என்றும், அகவாழ்க்கையை (மனம்) பண்பாடு என்றும் கூறலாம்.

பண்டைத் தமிழரின் சிறந்த பண்பாடுகளில் ஒன்றாக விருந்தோம்பல் அமைந்துள்ளதை நாம் காணலாம். ''விருந்து'' என்ற சொல் ''புதிது'' என்ற பொருள் உடையது. முன்பின் அறிமுகமில்லாமல் புதிதாக வருவோரையே பண்டைய நாளில் விருந்தினர் என்று அழைத்தனர். இன்றைய நாளில் நண்பர்களும் உறவினர்களும் ''விருந்தினர்'' ஆகிவிட்டனர். விருந்து என்ற சொல் சொல் தெலுங்கில் விண்டு (Vindu) என்றும் மலையாளத்தில் ''விருன்னு'' (Virunnu) என்றும் வழங்கப் படுகிறது.

விருந்தினரைப் பண்டைத் தமிழர் வரவேற்று உபசரித்த தன்மையினைச் சங்க இலக்கியங்களிலிருந்து நாம் அறியலாம். கணவன் தன் மனைவியிடம் காணக் கூடிய அடிப்படைப் பண்பு விருந்தினரை நன்கு உபசரிக்கும் தன்மையே ஆகும் என்று நற்றிணைப் பாடல் (142) கூறுகிறது.

> ''அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
> முல்லை சான்ற கற்பின்
> மெல்லியல் குறுமகள்''

இரவு நேரத்தில் விருந்தினர் வந்தாலும் மனம் கோணாமல் மகிழ்ந்து உபசரிக்கும் தன்மையை உடையவள் என்று இப்பாடல் கூறுகிறது. பெண்மையின் சிறப்பு இங்கு பேசப் படுகிறது.

வருகின்ற விருந்தினரை வரவேற்று உபசரிக்க முடியாத ஏழ்மை நிலையில் உள்ள ஒருவனது செயலைப் புறநானூறு(316) நேற்று வந்த விருந்தினரை உபசரிக்கத் தனது பழைய வாளை அடமானம் வைத்தான். இன்று வந்த விருந்தினருக்காகத் தனது யாழைப் பணயமாக்கினான் என்று கூறுகிறது.

> ''நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
> இரும்புடைப் பழவாள் வைத்தனன், இன்றிக்
> கருங்கோட்டுச் சீறியாழ் பணையமது கொண்டு
> ஈவதிலாளன்''

இப்பாடல் காட்டும் உணர்வு அருமையிலும் அருமையான ஒன்றன்றோ!

தலைவி கோபம் தீர

நற்றிணை [120] காட்டும் ஓர் அழகிய காட்சி. தலைவன் மீது ஊடல் கொண்டுள்ள நிலையில் தலைவி சமையல் செய்து கொண்டிருக்கிறாள். இந்த நிலையில், தலைவன் நினைக்கிறான். 'யாராவது விருந்தினர்கள் வர மாட்டார்களா இந்த நேரத்தில், விருந்தினரைக் கண்டால் அவள் கோபம் போய்விடும். முகத்தில் மகிழ்ச்சி தோன்றும்' என்று

''.........நப்புலந்து
அட்டிலோளே அம்மா அரிவை
எமக்கே வருகதில் விருந்தே சிவப்பு ஆன்று
சிறிய முள்எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகம் காண் கம்மே''

விருந்தினர் வருகை எவ்வளவு இனிதாகக் காட்டப்படுகிறது

திருவள்ளுவர் ''விருந்தோம்பல்'' என்று பத்துக் குறட்பாக்களை இதற்காக ஒதுக்கீடு செய்துள்ளார்.

''உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.''

விருந்தினரை உபசரிக்காத செல்வமிருந்தும் அது வறுமையே ஆகும் என்கிறார் திருவள்ளுவர்.

கம்பர் தரும் காட்சி சற்று வேறுபட்டதாக அமைந்துள்ளது. ராமனைப் பிரிந்த அசோகவனத்தில் வாடும் சீதை, நான் இங்கிருப்பதால் இந்த நேரத்தில் ராமனிடம் விருந்தினர் வந்தால் அவர் என்ன செய்வார் என்று மனம் விம்முகிறாள்.

''விருந்து கண்டபோது என்னுறுமோ
வென்று விம்மும்''

இல்லத் தலைவியின் கடமை நெஞ்சம் தவிக்கிறது இங்கு.

சேக்கிழார் பெரிய புராணத்திலே இளையான்குடி மாறன் என்ற சிவனடியார் விருந்தினர் வந்தபோது உணவு சமைக்க அரிசி இல்லாமல் விதைத்த நெல்லை வயலிலிருந்து பொறுக்கி வந்து உணவு சமைத்தார் என்று காட்டுகிறார்.

கலிங்கத்துப் பரணியிலே செயங்கொண்டார் காட்டும் காட்சி வினோதமானது. போர்க்களத்திலே இறந்து கிடக்கின்ற வீரர்கள் கழுகும் பருந்தும் தம் உடலை விரும்பி உண்ண வேண்டும் என்று முக மலர்ச்சியுடன் காணப்படுகின்றனராம்.

" விருந்தினரும் வறியவரும் நெருங்கி உண்ண
மேன்மேலும் முகம் மலரும் மேலோர்போலப்
பருந்தினமும் கழுகினமும் தாமே உண்ணப்
பதும முகம் மலர்வாரைக் காண்மின் காண்மின்"

விருந்தினர்க்காகத் தம் உடலையும் கொடுக்கும் மனநிலை உயர்வானதன்றோ !

தமிழரின் விருந்தோம்பும் பணியில் காணும் ஒரு சிறப்புக் கூறு சிலப்பதிகாரத்திலே காணப்படுகிறது. அந்தப் பண்பு இன்று வரை தமிழரிடையே நின்று நிலவி வருகிறது.

நமது வீட்டிற்கு விருந்தினர் வரும் நேரங்களில் அவர்களை நாம் நமது குடும்ப உறுப்பினர்களாக்கி உறவு முறையில் அழைப் பது வழக்கம். வயதிற்கு தகுந்தாற்போல் இந்த உறவு முறை அமையும். சிலப்பதிகாரத்திலே கவுந்தி அடிகள் கோவலனை யும் கண்ணகியையும் இடைக்குல மடந்தையான மாதரியிடம் அடைக்கலம் கொடுக்கிறார், இந்த நிலையில் மாதரி கோவலனை மகனாகவும் கண்ணகியை மருமகளாகவும் உறவாக்கிக் கொள் கிறாள் கொலைக் களக்காதையில்

நங்கையே மருமகள்:

'என்னுடன் நங்கை ஈங்கிருக்கெனத் தொழுது' என்ற அடியில் 'நங்கை' என்று கண்ணகியை மாதரி அழைக்கிறாள். நங்கை என்பதற்கு விளக்கம் எழுதும் அடியார்க்கு நல்லார் நங்கை என்று புதல்வர் மனைவியரைக் கூறும் முறைப் பெயராத லின் நங்கை என்றாள் என்கிறார். இஃது அக்கால வழக்கு, கோவலனைத் தனக்கு மகனாகக் கருதி இங்ஙனம் கூறினாள், என்கிறார்.

மேலும் Dravidian Etymological Dictionary (2445) நங்கை என்பதற்கு மருமகள் என்று பொருள் கூறுகிறது. இது தமிழர் பண்பாட்டை விளக்கும் அரிய செய்தியாகும். இக்காலத்தவர் மருமகளை அழைப்பதற்குத் தமிழில் வார்த்தையில்லை என்று தடுமாறி விடுகின்றனர். பெயர் சொல்லித்தான் அழைக்கின்றனர் மருமகளை அழைக்க நங்கை என்பதை அழைப்புப் பெயராகப் பயன்படுத்தலாம் அல்லவா. அழைப்பதற்கும் இனிமையாக இருக்கும். உறவும் வலுப்படும். மாமியார் மருமகள் உறவு வலுப்பட்டால் போதுமே. குடும்பத்தில் பிணக்கு எப்படித் தோன்றும்?

கணவன் உடன் பிறந்தவளை ' நாத்தனார் ' என்று குறிப்பிடுவது வழக்கம். இந்தச் சொல் நாத்தூண் என்று சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படுகிறது. நாத்தூண் என்ற சொல்லே நாத்தனார் என்று மாறியுள்ளது. கன்னடத்தில் நாதினி, [Nadini] என்றும், மலையாளத்தில் நாத்தூய்ன் என்றும் கோத்தர் மொழியில் நாய்தூய்ன் என்றும் வழங்கப்படுகிறது. நாத்னார் என்பது நாத்தி என்றும் குறிப்பிடப்படுகிறது. 'நாதி' என்ற சொல்லுக்கு மகன் என்று ஒரு பொருள் கூறுகிறார் வின்சுலோ தனது அகராதியில்.

பேச்சு வழக்கில் ஒருவரைத் திட்டும்போது, ' உனக்கு நாதி உண்டா ' என்று கேட்பதை நாம் கேட்டிருக்கிறோம், இதில் குறிப்பிடும் ' நாதி ' என்பதற்கு உறவினர், வாரிசு என்ற பொருள் அமைவதைக் காணலாம்,

மாதரியின் மகள் ஐயை கண்ணகிக்கு நாத்தனார் ஆகி விடுகிறார். இதனை இளங்கோவடிகள்

''நாத்தூண் நங்கையொடு நாள்வழிப் படூஉம்
அடிசில் ஆக்குதற்கு அமைந்த
நற்கலங்கள் நெடியாதளி யின்''

என்று மாதரி கூற்றாக நாத்தனார் (ஐயை) நங்கை (கண்ணகி) உடன் சமைப்பதற்குத் தேவையான பாத்திரங்களைக் கொடுங்கள் என்கிறார். இவ்வாறு இனிமையாக உறவு முறை கொண்டாடி விருந்தினரை உபசரிக்கும் பண்பு சிறந்த பண்பாட்டு விளக்கமாக அமைகின்றது.

மேற் காட்டிய வரிகளில் ''அமைந்த நற்கலங்கள்' என்பதற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் விருந்தினருக்குத் தாங்கள் பயன்படுத்திய பாத்திரங்களைக் கொடுக்காமல் புதிய பாத்திரங்களைக் கொடுங்கள் என்பதாக அது பொருள் படுகிறது என்கிறார். விருந்தினருக்கு நாம் வாழை இலை போட்டு உணவு படைக்கும் வழக்கம் இதனை விளக்குகிறது. விருந்தோம்பும் பண்பாட்டின் ஓர் அம்சமாக இதனையும் தமிழர் இன்று வரை கடைப்பிடித்து வருகின்றனர்.

மனித மேன்மையை, உயர்வை விளக்குவது விருந்தோம்பல் பண்பாடு. பல்வேறு சமூகத்தினரோடு கலந்து உறவு கொள்ளும் பொழுது, இது மேன்மேலும் செழுமைப் படுகிறது, உலக மக்களினத்தை ஒன்றிணைக்கிறது.

(நன்றி : 'தமிழ் முரசு', சிங்கப்பூர், 15—11—1992)

என் நினைவில் க. நா. சுப்ரமண்யம் என்னும் பத்திரிகையாளர் *

பா. மதிவாணன்

'என் நினைவில் க. நா. சு.', 'க நா. சு. என்னும் பத்திரிகையாளர்' என இரண்டாகப் பகுத்துக் கொள்வது தான் என்னைப் பொறுத்தவரை சரியானதென்று நினைக்கிறேன்.

ஒரு தாத்தாவின் நினைவைப் பாட்டி முதலிய, நெருங்கிய சம காலத்தவரும், தாத்தாவின் மகன் முதலிய அடுத்த தலைமுறையினரும் நினைவு கூர்வது ஒருவகை நானோ, க·நா·சு வைப் பொறுத்தவரை, பேரனின் நிலை நின்று நினைவு கூர்பவன்.

எழுத்தாளர் ஜெயகாந்தனுக்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம் 'இராசராசன் விருது' வழங்கிக் கருத்தரங்கம் நடத்தியபோது, அதில் கலந்துகொள்ளக் க. நா. சு. வந்திருந்தார். அப்போதுதான் அவரை முதலும் கடைசியுமாக நேரில் பார்த்தேன். நான் எதுவும் பேசவில்லை அவர் பிறரோடு பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். க. நா சு. கூறிய கருத்தொன்றைக் கேட்டு 'ஆனால் அந்த நூலில் அப்படி எழுதியிருக்கீங்களே!' என்று முரண்பாட்டைச் சுட்டிக் காட்டினார் ஒருவர் 'அதெல்லாம் இன்னுமா நினைவில் வச்சிருக்கீங்க?' என்று க நா. சு புன்சிரிப்புடன் கேட்டது மங்கலாக என் நினைவில் நிற்கிறது. க. நா. சு. வை நேரில் கண்டது பற்றிய நினைவு இவ்வளவுதான்.

ஆனால் நான் தமிழ் எம்.ஏ. படித்தபோது (1979) 'தமிழ் இலக்கியக் கொள்கைகள் என ஒரு தாள் இருந்தது. அதற்காக நூல்களைத் திரட்டிப் படித்த போதுதான், க. நா. சு வின்

---

*தஞ்சாவூர் எழுத்தாளர் சங்கமும் 'சும்மா' இலக்கியக் கும்பலும் க. நா. சுப்ரமண்யம், ஜி. சங்கரப்பிள்ளை, சஃப்தார் ஹஸ்மி ஆகியோர் மறைவிற்கு இரங்கல் - சந்திப்புக் கூட்டமொன்றை 18—01—1989 அன்று நடத்தின. அக்கூட்டத்தில் 'நம் நினைவில் க. நா. சு. என்னும் ... ...' எனும் பொதுத் தலைப்பின் கீழ் 'எழுத்தாளர்', 'விமர்சகர்' முதலிய உள் தலைப்புக்களில் அவரை நினைவு கூர்ந்து உரையாற்றும் பொறுப்புச் சிலருக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. அக்கூட்டத்தில் க.நா.சு. என்றும் பத்திரிகையாளரை நினைவு கூர்ந்து ஆற்றிய உரையின் எழுத்து வடிவமே இக்கட்டுரை.

'விமரிசனக் கலை', 'முதல் ஐந்து தமிழ் நாவல்கள், 'படித்திருக்கிறீர்களா?' போன்ற நூல்களை எதிர்கொண்டேன்

பொதுவாகத் தமிழறிஞர்கள், பேராசிரியர்களின் நூல்களில் காணப்பட்ட – இலக்கியங்களின் உருவ உள்ளடக்கக் கூறுகள் பற்றியும் படைப்பாளிகள் பற்றியும் தகவல்கள் தருதல், பொழிப்புரை தருதல் இவற்றைத் தாண்டிச் சற்றே இரசனை முறையில் இலக்கியப் பகுதிகளை விவரித்தல் எனும் — போக்கு எனக்குச் சலிப்பைத் தந்தது. அந்த நிலையில், க. நா. சு. நூல்களின் இயல்பான, நம்மிடம் நேரில் பேசுவது போனற நடை, பரவலான படிப்பால் விளைந்த ஆழம் ஆகியவை என்னை ஈர்த்தன. ஆனால், க. நா. சு. வின் அபிப்பிராய உதிர்ப்புக்களுக்கு அடிப்படையாயமைந்த அணுகுமுறை எனக்குப் பிடிபடாமையால் க. கைலாசபதி முதலியோரிடம் ஈடுபாடு ஏற்பட்டது. எனினும், க. நா. சு நூல்களையோ, கட்டுரைகளையோ படிக்கும் ஆர்வம் சற்றும் குறையவில்லை. அவரை நான் நேரில் பார்த்திருக்காவிட்டாலும் கூட, அவருடைய நூல்கள் வழிக்கண்ட பிம்பமாக அவர் என் நினைவில் இருந்து கொண்டிருப்பார்.

ஆனால், "நான் பத்திரிகைகளுக்கு எழுதுகிறேனே தவிர, முழுக்க முழுக்கப் பத்திரிகைக்காரன் இல்லை" (பத்திரிகை விமர்சனம் - 8, துக்ளக்) என்று தம்மைப் பற்றிச் சொல்லிக் கொள்கிற ஒருவரைப் பத்திரிகையாளர் என்கிற முறையில் நினைவு கூர்வது சற்றுக் கடினம்தான். பத்திரிகையாளர் தெ. ச. சொக்கலிங்கம் பற்றி ஆராய்கிறவன் என்பதால், எனக்கு இந்தப் பொறுப்புத் தரப்பட்டுள்ளது. அதனை ஏற்று, ஒருசில நாட்களில் நான் திரட்டிய குறிப்புக்களை உங்கள் முன் வைக்கின்றேன்.

தஞ்சை மாவட்டத்து வலங்கை மானில் 31-01-1912 ஆம் ஆண்டு பிறந்த க. நா. சு 15-12-1988 ஆம் நாள் மறைந்தார். அவரது உலக வாழ்வு 77 ஆண்டுகள்.

> நான் தமிழில் எழுதுவது என்று தீர்மானித்து எழுத ஆரம்பித்ததற்கு மூல காரணமாக இருந்த பி.எஸ், ராமையாவின் வார்ப்படம் என்கிற கதை, டி.எஸ். சொக்கலிங்கம் எடிட் பண்ணிக் கொண்டிருந்த காந்தி என்கிற வாரப் பத்திரிகை (மாதமிருமுறை?)' யில்தான் வந்தது (இலக்கியச் சாதனையாளர்கள், ப 159)

என்று குறிப்பிட்டுள்ளார் க. நா சு. அவர் குறிப்பிடும் 'வார்ப்படம்' 1934 செப்டம்பர் 5 ஆம் நாளிட்ட 'காந்தி' மாத இதழில் வெளி வந்தது எனவே, 1934 இல் க. நா. சு, தமிழ் எழுத்துலகில் நுழைந்திருக்கிறார் என்றாகிறது. இவ்வாறு 1934 முதல் 1988 வரை சுமார் 55 ஆண்டுகள் அவரது இலக்கிய வாழ்வுக் காலமாகும்.

> இந்தியாவிலும் உலக அரங்கிலும் புதுத் தமிழ்
> இலக்கியத்தின் மேன்மையே தன் வாழ்வில்
> லட்சியமாகக் கொண்டு ஐம்பதாண்டுகளுக்கும்
> மேலாக எழுத்தாளராகவே இருந்துவரும்
> க. நா. சுப்ரமணியம் தமிழ் நாவல், சிறுகதை,
> கட்டுரை, மொழி பெயர்ப்பு, இலக்கியப் பத்திரிகை
> வெளியீடு ஆகிய துறைகளில் மைல் கல்கள்
> பதித்திருக்கிறார்

என்கிறார் அசோகமித்திரன். (க. நா. சுப்ரமண்யம், விமரிசனக் கலை, 1984-பின்னட்டை வெளிப்புறம்)

க. நா. சு. பணியாற்றிய துறைகளுள் பத்திரிகைத் துறையை அதிலும் இலக்கியப் பத்திரிகை வெளியீட்டை - இறுதியில்தான் வைத்துள்ளார் அசோகமித்திரன். இது சரியானதே. ஆனால் தமிழ் இலக்கியம் பத்திரிகைத் துறையை மட்டும் தனித்துக் காணும்போது,

> ஒரு கோடியில் ''தாமரை'' ''வானம்பாடி''யிலிருந்து ஆரம்பித்து இடையில் ''கணையாழி'' ''ஞானரதம்'' இவற்றைக் கடந்து இன்னொரு கோடியில் ''அஃ'' வரை எல்லா பத்திரிகைகளும் ''எழுத்து''வுக்கும் க நா. சு. வுக்கும் கடமைப்பட்டவை.

என்கிற வெங்கட் சாமிநாதனின் கருத்து ஓரளவு ஏற்கக் கூடியது தான் (ஓர் எதிர்ப்புக் குரல், ப. 91).

க நா. சு. ஆசிரிய நிலையிலிருந்து பணியாற்றிய இதழ்கள் பற்றிய தகவல்களை இங்குத் தருவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

க. நா. சு. 1939இல் 'சூறாவளி' எனும் இதழைத் தொடங்கி, ஆசிரியராயிருந்து நடத்தினார். இதுவே அவர் ஆசிரியப் பணியாற்றிய முதல் இதழாகும். இது வார இதழாகச் சுமார் ஆறு மாதங்கள் வந்து நின்று விட்டது.

1946-இல் 'சந்திரோதயம்' எனும் மாதமிருமுறை இதழைத் தொடங்கி ஆசிரியராயிருந்து நடத்தினார். இது சுமார் ஒன்றரை யாண்டு வெளிவந்தது.

1963 முதல் 1965 வரை சுமார் இரண்டாண்டுகள், 'இலக்கிய வட்டம்' எனும் இதழைத் தொடங்கி ஆசிரியராகப் பணியாற்றினார்.

பின்னர் நெடிய இடைவெளிக்குப் பிறகு 1986-இல் தொடங்கி ஓராண்டு வெளிவந்த 'ஞானரதம்' எனும் மாத இதழிலும், 1988-இல் தொடங்கப்பெற்ற 'மூன்றில்' எனும் மாத இதழின் முதல் மூன்று தனியிதழ்களிலும் 'சிறப்பாசிரியர்' எனும் பொறுப் பேற்றுச் செயல்பட்டு மறைந்தார். ஞானரதமும், மூன்றிலும் பிறர் தொடங்கி நடத்தியவை.

புள்ளி விவரக் கணக்கிட்டுப் பார்த்தால் அவரது மொத்த இலக்கிய வாழ்க்கையில் - 55 ஆண்டுகளில் - பத்திரிகையாளர் என்கிற முறையில் பத்தில் ஒரு பங்குக் காலமே - $5\frac{1}{4}$ ஆண்டுகள் பணியாற்றியுள்ளார் என்று தெரிகிறது.

ஆனாலும் பத்திரிகைத் துறை பற்றிய தம் அனுபவங்களை யும் அபிப்பிராயங்களையும் வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் அவர் சொல்லி வந்திருக்கிறார்.

> ராமையா இல்லாத மணிக்கொடியில் ப. ரா தலைமையில் அவரை ஆசிரியராகக் கொண்டு நடந்தாலும், எழுத(ப்) புதுமைப்பித்தன் விரும்பவில்லை. அவர் கதைகளைத் தாங்கிவர ஒரு பத்திரிகை வரவேண்டும் என்று வற்புறுத்தி என்னிடம் இருந்த பணத்தை முதலீடு செய்து பத்திரிகை நடத்தலாம் என்று வற்புறுத்தியது கி. ரா. அவரை(த்) துணை ஆசிரியராகக் கொண்டே நான் 1939-ல் சூறா வளிப் பத்திரிகையைத் தொடங்கினேன். பெயர் சூட்டியது புதுமைப் பித்தன். ஆறு மாதங்களில் என் கையில் இருந்த பணம் தீர்ந்துபோய்விட்டது. ஆனால், பத்திரிகை ஆசிரியராக, சூறாவளியின் சிறப்பு அம்சங்களால் எனக்குப் பெயர் வந்துவிட்டது. அந்தச் சிறப்பு அம்சங்களெல் லாம் கி ரா வினுடையவைதான் - உண்மையில் பத்திரிகை எப்படி நடத்தவேண்டும் என்றே எனக்கு அப்போது தெரியாது. (இலக்கியச் சாதனையாளர்கள், ப 195)

என்று தம் முதல் பத்திரிகையாசிரிய அனுபவத்தைக் கூறி யுள்ளார் க.நா.சு.

அடுத்து, அவர் நடத்திய 'சந்திரோதய'த்தில் புதுமைப் பித்தனின் கடைசிக் கதை என்று கருதத்தக்க கபாடபுரம் வெளி வந்தது, பெரும்பாலும் ஒன்றுவிட்டு ஓர் இதழில் தி ஜானகிராமன் கதைகள் வெளிவந்தது, பிறர் வெளியிட விரும்பாத லா. ச. ராமாமிருதம் கதைகளையும் வெளியிட்டது போன்றவற்றை யெல்லாம் நினைவுகூர்ந்து எழுதியுள்ளார் க. நா. சு. (இலக்கியச் சாதனையாளர்கள், பக். 18; 101)

பத்திரிகைத் துறையில் பணியாற்றும் வாய்ப்பொன்று அக் காலத்தில் அவரைத் தேடி வந்தது.

> டி. எஸ். சொக்கலிங்கம் ஆரம்பித்திருந்த தினசரி பத்திரிகையில் ஞாயிறு பதிப்புக்கு என்னைப் பொறுப் பேற்றுக்கொள்ள வ. ரா. ஒருசமயம் வற்புறுத்தினார். எனக்கு, பத்திரிகை ஆபீசில் கூட உத்தியோகம் பார்ப்ப தில் நாட்டம் இல்லை என்றும், ஒரு காலனா காசைப் பூவா தலையா போட்டு ''பூ'' வந்தால் வேலையை ஏற்றுக் கொள்கிறேன் என்றும் சொன்னேன், பூ வந்ததும் சரி என்றும் சொன்னேன். நல்ல வேலையாக, சொக்கலிங்கம் ப. ராமசாமி என்பவரை அதற்குள் வேலைக்கு அமர்த்தி விட்டார். எனக்கு நிம்மதி.
>
> (இலக்கியச் சாதனையாளர்கள், பக் 21)

என அது பற்றி விவரித்துள்ளார். அவர் இலக்கிய இதழ்கள் பற்றியே ஆர்வங்கொண்டிருந்தார்.

> 'மணிக்கொடி', சூறாவளி' 'சந்திரோதயம்', 'காந்தி', 'கலாமோகினி', 'சுதந்திரச் சங்கு', 'பாரத தேவி' 'தேனீ' முதலிய பத்திரிகைகள் இலக்கியத்துக்கு ஓரளவு சேவை செய்ய முயன்றன. தொடர்ந்து செய்யவில்லை - ஒரே தரமாகவும் செய்யவில்லை, ஆனால், இலக்கிய ஒளி அழியாமல் தமிழில் அவை காப்பாற்றின. அந்த மாதிரி இலக்கியப் பத்திரிகைகள் இலக்கிய வளர்ச்சிக்கு உதவ மிகவும் தேவை. ஒரு பத்து வருஷங்களாக அப்படிப்பட்ட முயற்சி தமிழ்நாட்டில் இல்லாதது வருந்தத் தக்கது (விமரிசனக் கலை)

என்று, ஐம்பதுகளின் இறுதியில் குறிப்பிட்ட க.நா சு. 'சரஸ்வதி', 'எழுத்து' ஆகிய சம கால இதழ்களை ஓரளவு நிறைவாகச் சுட்டிக் காட்டினார்.

இலக்கிய இதழல்லாதவை, தரமானவையாய் இருப்பினும் அவற்றில் க.நா.சு.வுக்கு ஈடுபாடு இல்லை. வை கோவிந்தனின் 'சக்தி' இதழ் பற்றி ''இலக்கியம் என்று நான் நினைத்த விஷயங்கள் அதிகமில்லை. மொத்தத்தில் பத்திரிகை ஒன்றை நடத்தியதுடன் தமிழில் நல்ல பல அறிவியல் நூல்கள் வரவேண்டும், என்று ஆசைப்பட்டுச் செயல்பட்டார்'' எனவும் 'சக்தி' கோவிந்தனை மதிப்பிட்டிருக்கிறார் (இலக்கியச் சாதனையாளர்கள் பக். 150, 158).

தாம் 1963இல் தொடங்கிய இதழ் பற்றிப் பிற்காலத்தில், 'நான் முழு இலக்கியப் பத்திரிகையாக நடத்திய இலக்கிய வெளி வட்டத்தில் ...' என்று குறிப்பிட்டுள்ளார் அப்பத்திரிகை வெளி வந்த காலத்தில் ''தமிழிலும் இலக்கியத் தரமான பத்திரிகை களுக்கு இடம் இருக்கிறது அதை வளர்க்க வேண்டிய அவசிய மும் சூழ்நிலையும் இன்று இருக்கிறது'' (இலக்கியத்துக்கு ஒரு இயக்கம், ப 139) என்று நம்பிக்கையுடன் கூறினார்.

இந்த நம்பிக்கை அவ்வப்போது மறைந்து விடுவதையும் அவரிடம் காண முடிகிறது. இலக்கிய இதழ்கள் நடத்துவது பற்றி எண்பதுகளின் நடுவில் அவர் கூறிய கருத்துச், சற்று அதிர்ச்சி தரக் கூடியதுதான்

> இலக்கியப் பத்திரிகைகள் என்று சொல்லிக்
> கொள்பவை தொடர்ந்து ஒரு ஆண்டு, அதிகம்
> போனால் இரண்டு ஆண்டுகளுக்குமேல் நடக்கக்
> கூடாது என்கிற நினைப்புண்டு. அப்படி
> நடந்தால் இலக்கிய வேகம் குறைந்து
> லாப நஷ்டக் கணக்குப் பார்க்கும் வியாபார
> நோக்கம் எப்படியும் வந்துவிடும். இப்ப சத்தியாக
> நிறுத்திவிட்டு மறுபடி 10,000, 20,000 ரூபாய்
> விடலாம் என்று தெம்பு, உத்தேசம் இருக்கிறபோது
> தொடங்கலாம்

என்று 'ஞான ரத'த்தில் எழுதினார்.

கலை இலக்கியமல்லாத பிறவற்றை, பொழுதுபோக்கைத் தரமாகத் தரும் பத்திரிகைகளை நடைமுறைத் தேவை கருதி- அவற்றில் அவருக்கு ஈடுபாடில்லையாயினும் - ஏற்றுக் கொண்டவர்தாம் க. நா. சு என்றாலும் அவர் மறைவதற்கு ஒரு மாதம் முன்பு வெளிவந்த 'முன்றில்' (நவம்பர், 88) இதழில்

> தமிழில் இலக்கியச் சூழல் என்று (அப்படிச்
> சொல்லக் கூடியது ஏதாவது உண்டானால். இங்கு
> இலக்கிய எதிர்ப்பு (ச்) சூழல்தான் அதிகமாக
> இருக்கிறது என்பது வெளிப்படை) அதில் குட்டை
> குழப்புகிறவர்கள் பத்திரிகைக் காரர்கள்தான்.
> பத்திரிகை எழுத்துக்கும் இலக்கிய எழுத்
> துக்கும் தராதரம் நிரம்பிய தமிழ்நாட்டில்
> கூலிக்காக இலக்கியத்துக்கு மாரடிக்கும் பத்திரிகைக்
> காரர்கள் நாங்களும் இலக்கிய சேவை செய்கிறோம்
> என்று சொல்லிக் கொண்டு குறுக்குக் கால் பாய்ச்சு
> கிறார்கள்.
> பத்திரிகை எழுத்துக்கள் இலக்கியமாக அமையக்
> கூடாது என்று
> சட்டம் ஒன்றும் இல்லை. ஆனால் பொதுவாக இலக்கிய
> மாக
> அமைவதில்லை என்பது சரித்திரம்.

எனக் கூறியவர் மேலும் ஒருபடி சென்று ''பத்திரிகைக் காரர்கள் 'Hacks' தான்'' என்று மிகக் கடுமையாகத் தீர்ப்புக் கூறிவிடு கிறார்.

''விலைமாதையும், பிரசுரகர்த்தா தந்த கூலிக்கு நூல்கள் எழுதித் தந்த எழுத்தாளர்களையும் 'Hacks' என்று ஆங்கிலத்தில் ஒரே சொல்லால் குறிக்கிற பழக்கம் இருந்திருக்கிறது'' என்று அவரே விளக்கம் தந்துள்ளார். நல்ல இலக்கியச் சூழல் உருப் பெறத் திட்டம் ஒன்றையும் அளித்துள்ளார்.

இறுதியாக ஒன்று, க. நா. சு. பற்றிக் க. கைலாசபதி எழுதிய திறனாய்வுப் பிரச்சினைகள் எனும் விவாதத் தொடரில், க. நா.சு 'வாசகர் கூட்டம்', 'தரை மகா ஜனங்கள்' என்று கூறியும், 'பொது ஜனம்' என்பதை ஏளனமாகக் கையாண்டும் வந்திருப் பதைச் சுட்டிக் காட்டிக் க. நா. சு. வின் 'மக்கள் விரோதப் போக்கை' நிறுவ முயன்றுள்ளார். க. கைலாசபதியின் விவா தத்தில் பேரளவு எனக்கு உடன்பாடு உண்டென்றாலும், சில வற்றை மேலும் தெளிவு படுத்தியாக வேண்டும். மக்கள் (People), வெகுசனம் எனப்படும் திரளினின்றும் (mass) வேறா னவராவர். க. கைலாசபதியின் ஆய்வுத் துறைத் தோழர் எனத் தக்க, கா. சிவத்தம்பி தம் 'நாவலும் வாழ்க்கையும்' எனும் நூலின் இரண்டாம் பதிப்புக்கு 1988 ல் எழுதிய முன்னுரையைச் சுட்டிக் காட்டத் தோன்றுகிறது (பக். XII-XIV)

இலக்கியத்திலும் அரசியலிலும் மக்களுக்கும் வெகுசனத்துக்குமான வேறுபாட்டை நாம் உணர்ந்து கொள்வது அத்தியாவசியமாகவுள்ளது. இந்த வேறுபாட்டைச் சரியாக இனங் கண்டு கொள்ள முடியாததனாலேதான் இடதுசாரி இலக்கியம் சில வேளைகளில் "கோஷ இலக்கிய''மாகப் போய் விடுகின்றது

வெகுசன வாசிப்பு ஏற்படுத்தியுள்ள இன்றைய நிலை காத்திரமான இலக்கியத்துக்கு எதிரான சவால் மாத்திரமன்று, அது ஆரோக்கியமான அரசியல் வளர்ச்சிக்கும் எதிரானது என்பது உணரப்படல் வேண்டும்.

இந்த வகையில் க.நா.சு. கைலாசபதி இருவரையுமே மக்களிடம் கொண்டு செல்லுதல் வேண்டும்.

வேண்டுகோள்

பொழிலன்பர்களுக்கு,

வணக்கம். கடந்த 66 ஆண்டுகளாக, பல்வேறு இன்னல்களுக்கிடையே, தமிழ் வளர்ச்சி கருதி, தமிழாராய்ச்சித் திங்களிதழான 'தமிழ்ப்பொழிலை'' யாம் வெளியிட்டு வருவது தாங்கள் அறிந்ததே.

அண்மையில் ஏற்பட்ட அச்சுத்தாள் விலை உயர்வாலும், அச்சுக்கூலி உயர்வாலும், 'தமிழ்ப்பொழிலின்' ஆண்டுக் கட்டணத்தை ரூ. 50/- லிருந்து ரூ. 56/- ஆக உயர்த்த வேண்டிய சூழ்நிலைக்கு ஆட்பட்டிருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைமை நூலக அலுவலர்களும், ஆண்டு உறுப்பினர்களும், இவ்விலை உயர்வைப் பொருட்படுத்தாது, தொடர்ந்து நல் ஆதரவை அளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி,

அன்புடன்,
ஆசிரியர்.

புலவர் ஏறு அ. வரதநஞ்சைய பிள்ளை
- ஓர் அறிமுகம்

வித்வான் வெ. கு. வரதராசன்,
எம் ஏ, பி ஓ எல் பி. டி.

பழுத்த செந்தமிழ்ச் சுவையுணர் சிவபிரான் பதத்தில்
அழுத்து சிந்தையை ஐந்தெழுத் தோதியென் றருளிப்
புழுத்த நாயினும் கடையானாம் புகுந்துளம் ஆண்ட
தழைத்த சீர்வரத நஞ்சைய அடிகளே சரணம் !

''பிள்ளையவர்கள்'' என்றால் ம. ா. வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களையும், 'நாவலர் அவர்கள்' என்றால் ஆறுமுக நாவலர் அவர்களையும் 'நாட்டாரவர்கள்' என்றால் வேங்கடசாமி நாட்டார் அவர்களையும், 'செட்டியார் அவர்கள்' என்றால் தியாகராசச்செட்டியார் அவர்களையும் 'ஐயரவர்கள்' என்றால் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரவர்களையும் குறிக்கும் இவை குலத்தால் சுட்டப்படும் பெயர்கள்

'கவிமணி' என்றால் தேசிகவிநாயகம் பிள்ளையவர் களையும், 'கவியரசு' என்றால் கரந்தை வேங்கடாசலம் பிள்ளை யவர்களையும், பண்டிதமணி' என்றால் கதிரேசன் செட்டியாரவர் களையும் குறிப்பிடுவன போல, 'புலவர் ஏறு' என்றால் திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்களையே குறிக்கும். இவை அவரவர்களுடைய சிறப்பினைக் கண்டு அளித்த பாராட்டு விருது அடை மொழிகளாம்.

புலவரேறு அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள் 1-9-1887 ஈசுவர வருஷம் ஆவணி மாதம் 18-ஆம் நாள் சனிக்கிழமை கோகுல அஷ்டமி திதி ரோகிணி நட்சத்திரத்தன்று இவ்வுலகில் அவதரித்தார். அந்நாள் கண்ணன் பிறந்த நன்னாள். இவரது தந்தையார் திரு. அப்பாசாமிபிள்ளை என்பவராவார் தாயார் திருமதி. வரதாயம்மாள்.

திரு வரதநஞ்சைய பிள்ளை அவர்களது தந்தையாரும் அவர்தம் பாட்டனார் திரு. கந்தசாமி பிள்ளை அவர்களும் நல்லாசிரியர்களே – தமிழ்ப்புலமையும் எளிதில் கவிபாடும் ஆற்ற லுமுடையவர்களாக விளங்கினார்கள் என்பது திரு. வரதநஞ்சைய பிள்ளையவர்களை வாழ்த்திப்பாடிய சாற்றுக்கவிகளால் தெளிவாகின்றன.[2]

இவரது பூர்வீகம் நாமக்கல்லை அடுத்துள்ள தாழம்பாடி என்ற சிற்றூராகும்[3] வடலூர் இராமலிங்க அடிகளாரும், குலச் சிறை நாயனாரும், நக்கீரரும் தோன்றிய சீர் கருணீககுலத்தினர்.[4]

திரு வரதநஞ்சைய பிள்ளையவர்கள் தமது ஒன்பதாம் வயதிலேயே தந்தையை இழந்தார் இவர். தமது தந்தையார் அமைத்த திண்ணைப்பள்ளிக்கூடத்தில் (அரசினர் உதவி பெற்றது) ஆசிரியராய்ப் பணியாற்றிக் குடும்பத்தினைக் காக்கும் பொறுப்பினை மேற்கொண்டார்.

இவர், பிறர் உதவியின்றித் தாமாகவே பல நூல்களையும் கற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. அக்காலத்தில் இவர் வாழ்ந்த பகுதியில் கல்வி கேள்விகளில் வல்லார் ஒருவருமில்லை ஆனாலும் கற்கவேண்டுமென்ற வேட்கை இவரைச் சும்மாவிருக்க விட்டு வைக்கவில்லை. பெரும்புலவராகிய தம் தந்தையார் கற்ற நூல்கள் பல இவருக்குக் கிடைத்தன நைடதம், அரிச்சந்திர புராணம், சூடாமணி நிகண்டு, நன்னூல் காண்டிகை உரை முதலியவற்றை முறையே படித்து ஐயமுற்றவிடத்தில் வினாக் குறியமைத்து வைப்பார். அந்தந்த நூல்களில் நிறைந்த பயிற்சி யும் நுண்ணறிவு மிக்கவரைச் சந்திக்குங்கால் அவர்களிடம் தம்முடைய ஐயங்களைக் கேட்டு விளக்கமுறுவார்[5]. இவர் பயின்ற இவரது நூல்களில் இவர் குறித்து வைத்த ஐயக்குறிகள் இன்றும் உள்ளன.[6]

இவ்வாறாகத் தமக்குக் கிடைத்த நூல்களை நன்கு பயின்றபின் வேறு பல நூல்களையும் தருவித்துக்கற்றுப் பயிற்சி பெற்று வந்தார். இவருக்கு இராமாயணத்திலும் பாரதத்திலும் தனிச்சுவையுண்டு. சங்க இலக்கியங்கள் அனைத்தையும் ஆய்ந்து கற்றவர். சைவ சமய சித்தாந்த நூல்களில் ஆழ்ந்த பயிற்சியும் மிக்க ஈடுபாடும் இவருக்கு உண்டு.

தாழம்பாடியை விட்டுச் சலகண்டாபுரத்தில் குடியேறிய இவர் கிராமக் கணக்கப்பிள்ளையாகப் பணிபுரியத் தொடங்கி னார். இவருக்குச் சோதிடக்கலை மிகச் சிறப்பாகக் கைவரப் பெற்றிருந்தது. இவர் பல சங்கங்களில் சொற்பொழிவாற்றியும், தலைமை தாங்கியும், சமயத்தொண்டும் தாய்மொழித் தொண்டும் செய்து வந்தார்.

'புலால் மறுப்பு' என்னும் நூல் எழுதி, அதன் மூலம் பல குடும்பங்களைப் புலால் உண்ணுதலைத் தவிர்க்கும்படி செய்தார். திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தை வள்ளல்

திருவாளர் உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், கரந்தைக் கவியரசு திருவாளர் வேங்கடாசலம் பிள்ளை ஆகியவர்களிடம் திருவாளர் வரதநஞ்சைய பிள்ளையவர்களுக்கு நெருங்கிய தொடர்பு உண்டு.

பல கூட்டங்களில் திரு. வேங்கடாசலம் பிள்ளை அவர் களைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கும்படியும், கூட்டத்தில் சொற்பொழிவாற்றும்படியும், ஏற்பாடுகள் செய்துள்ளார். ஒருவரைப் பிறருக்கு அறிமுகப்படுத்திவைப்பதில் திரு. வரத நஞ்சைய பிள்ளை அவர்கட்கு இருக்கும் மகிழ்ச்சியைக் கவியரசு தமது வெண்பாவால் வெளிப்படுத்தியுள்ளார். அவ்வெண்பா வருமாறு,

ஆர் வேங்க டாசலனென் றாரறிவார்? ஏனறிவார்
ஆரும் அறியாத அன்னோனை-ஊரறிய
நாடறியச் செய்தாரே நம்வரத நஞ்சையனார்
ஆடாரார் அன்னாராட் டின்?

புலவரேறு, தம்முன்னோர்களைப் போலத் தானும் கருவிலே திருவுடையார் என்பதற்கு இளமைக் காலத்தில் அவர் எழுதிய பாடல்களும் அப்பாடல்களில் உள்ள நயங்களுமே சான்று பகர்வன, காட்டாக ஒரு பாடல் தரப்படுகிறது.

மாட்டைக் கொடுத்தானை வாங்கினேன் பற்பலபேர்
வீட்டைக் கெடுத்தானை விற்றார்கள்-காட்டை
மருங்கி லிடுக்கிய நன் மாதரையுங் கண்டேன்
திரும்பினேன் சந்தைக்குச் சென்று.

இப்பாடலில் குறிக்கப்படும் செய்தி, 'பணம் கொடுத்துக் கரும்பு வாங்கினேன். பலர் ஆடை விற்றார்கள். குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு நீரூற்றும் மாதர்களையும்கண்டேன்!' என்பதாம்.

மாடு – செல்வம் - காசு – கொடுத்து
யானை - வேழம் - கரும்பு - வாங்கினேன்
வீட்டைக் கெடுத்தது – தூசு – ஆடை

இவ்வாறு பொருள் கொள்ளுதலை 'இலட்சித இலட்சணை' என்பர் வடநூலார்.

இவரிடம் முறையே தமிழ் பயின்று முன்னுக்கு வந்தவர்கள் பலர். அவர்களுள் இவரது தம்பி பண்டித-வித்துவான்

புலவரேறு தம் இளவலுடன் ஐயனார் மலை என்று தற்போது அழைக்கப்படும் வாட்போக்கி (இரத்தினகிரிக்)குச் சென்றுள்ளார். அம்மலை மீதுள்ள இறைவன்மீது,

வாட்போக்கி நாதன் மலரடியைப் போற்றாமே
நாட்போக்கி வீணே நலிந்தோமே —

என்று ஒரு வெண்பாவின் முதலிரு அடிகளைப் பாடினார் — உடனிருந்த பண்டித புலவர் திரு அ. கந்தசாமிப் பிள்ளையவர்கள் அப்பாடலைத் தொடர்ந்து,

....
....வேட்போக்கி
மாதிரதிக் காகமறித் துந்தந்தோன் கழல் இப்
போது நெஞ்சே சற்றேனும் போற்று

எனப் பாடி முடித்தார்[14].

வேட்-போக்கி–வேள்-மன்மதன்; மாதிரிதிக்காக- மாது + இரதிக்காக - இக்கருத்து அத்தலத்துச் சிவனை மன்னன் வெட்டினான் என்ற தலவரலாற்றுக்குகந்ததாக அமைந்திருப்பது போற்றுதற்குரியது.

அடுத்ததொரு பாடல்,

கார்நிறமாம் பத்துக்கால் காணும்பார் வாயெட்டுச்
சீர்நிற்கும் நல்லாரைச் சேருமே - ஏர் நிற்க
ஆடும் பணமென்றால் அஞ்சக்கை மூடுமிதை
நாடி யுரைப்பீர் புலவீர் நன்கு.

காங்கேயம் அட்டாவதானம் சேஷாசலக் கவிராயம் என்பவர் நம் புலவர் ஏறு வெளியூர் சென்றபோது சந்தித்துத் தம் கல்வியினருமையைத் தனவான்களிடம் காட்டித்தாம் ஏதேனும் வெகுமதிபெற வாய்ப்பு ஏற்படுத்தித் தரும்படி கேட்டுக் கொண்டார். புலவரேறும் தாமறிந்த நண்பர் பெருமக்களிடமும் சமீன்தாரர்களிடமும் இவரை அழைத்துச் சென்று தக்க சன்மானம் பெற்றுத் தந்தருளினார்.

அட்டாவதானம் சேஷாசலக் கவிராயர் புலவரேறு அவர்களுடன் நாமக்கல், அலங்கா நத்தம், லத்துவாடி, கீரம்பூர் முதலிய இடங்களுக்கெல்லாம் சென்று வந்தார்.

(தொடரும்)

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டுகலைபற்றிய ஆய்வுக்கட்டுரைகள் வேண்டப்பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைத்தல் நலம் நெடிதாயின் வகைப்படுத்தித் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப்பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பியனுப்பப் பெறா. ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக்கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறேன்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ்நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ	100	00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	,,	30	00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	,,	60	00
இராசராசசோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	,,	6	00
கபிலர் — நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	,,	4	00
நக்கீரர் — நாவலர் ந மு வேங்கடசாமி நாட்டார்	,,	3	00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு பா. வே. மாணிக்க நாயக்கர்	,,	2	00
கவியரசு நினைவு மலர்	,,	1	00
தமிழரசி குறவஞ்சி	,,	0	75

பிற வெளியீடுகள்

தொல்காப்பியம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை

எழுத்ததிகாரம்	,,	40	00
சொல்லதிகாரம்	,,	45	00
கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்]	,,	7	50
கலைக் கூத்தன் கவிதைகள்	,,	4	50

விற்பனைக் கழிவு 20% உண்டு. அஞ்சல் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர். 613 002

Regd. No. [illegible]

நூல் - அஞ்சல்

Office of the Curator
21 APR
Madras-600 005
Govt. Oriental Manuscripts

பெறுநர்

திருமிகு

நூலகர்

அவர்கள்

அரசினர் கீழ்த்திசைச் சுவடி

நூலகம்

சென்னை - 5

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர்-613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2-50	3-00
ஆண்டுக்கட்டணம்	ரூ.	30-00	60-00
வாழ்நாள் கட்டணம்	ரூ.	250-00	600-00

வெளியிடுபவர்: திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம்
கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.

அச்சிடுபவர் : திரு. M. சந்திரமௌலி,
ஜெமினி அச்சகம், 1837/1, மேலராஜவீதி,
தஞ்சாவூர்-613 009.